



கல்முனை NET
kalmunainet.com உண்மையின் முகம்

பரிமாணம் Parimanam

# பரிமாணம்

தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்






இதழ்: 10 | பிலவ வருடம் வைகாசி 16 (30.05.2022 திங்கட் கிழமை) | பக்கங்கள்: 17 | விலை: 70/=





## கூட்டமைப்பின் துயலில்

## கல்முனையில் தமிழருக்கு எதிரான அறுவைச் சிகிச்சை!

08




14




# ஜனாதிபதியை பாதுகாக்கும் திருத்தத்தை ஏற்கப் போவதில்லை

**21 ஆவது திருத்த யோசனைக்கு எதிராக தமிழ் கட்சிகள் போர்க்கொடி**

03






## கல்குடா சுழியோடிகளின் உயிர்காக்கும் சேவைகள்

11

## மாஸ்டர் சிவலிங்கம்

05

## கல்முனையில் ஒரு காலிமுகத்திடல் வேண்டும்!

02



03

## கச்சதீவை விட்டுக்கொடுக்க முடியாது:

**பாதுகாப்பில் இந்தியாவுக்கு அச்சம் வேண்டாம்**



# கல்முனையில் ஒரு காலிமுகத்திடல் வேண்டும்!

நதீர் பாறுக்

அதிகளவான மக்கள் தொகை; மிகப் பெரிய நிலப்பரப்பு என்பனவற்றை கொண்ட பிரதேச செயலகங்கள் பல இன்று ஒன்றுக்கு மேற்பட்ட செயலகங்களாக பிரிக்கப்பட்டு செயல்பட்டுவருகின்றன. இதனால் அவ்வாறு பிரிக்கப்படும் பிரதேச இடப்பரப்பில் வாழுகின்ற மக்களுக்கு ஏராளமான நிதி மற்றும் அபிவிருத்தி சார் நன்மைகள் கிடைக்கப் பெறுவது கண்கூடு. அந்த வகையில் சம்மாந்துறை பிரதேச செயலகம் சம்மாந்துறை நாவிதன்வெளி இறக்காமம் எனவும் நிந்தவூர் பிரதேச செயலகம் காரைதீவு நிந்தவூர் எனவும் ஏற்கனவே பிரிக்கப்பட்டு உள்ளது.

இவ்வாறு கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கிராம சேவகர் 17+29+29 பிரிவுகள் மொத்தமாக கொண்டு கல்முனை பிரதேச செயலகம் இயங்கிவந்தது அதன் தென்பகுதி மக்கள் தமக்காக ஒரு பிரதேச செயலகம் வேண்டும் என கோரிக்கை வைத்தபோது 17 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்ட சாய்ந்தமருது பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டுள்ளது அதேபோன்ற கோரிக்கையை கல்முனையின் வடபகுதியில் 29 கிராமசேவகர் பிரிவுகளில் வாழுகின்ற மக்கள் தமக்கும் ஒரு பிரதேச செயலகம் வேண்டும் என்று கோரி நின்றபோது இந்தப் பிரதேசத்தில் வாழ்பவர்களில் அதிகமானவர்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்களின் கோரிக்கை மிக நீண்டகாலமாக நிராகரிக்கப்பட்டு வருகின்றது...

இனத்தின் அடிப்படையில் ஒரு தொகுதி மக்களின் உரிமைகளை மறுப்பது எந்த வகையிலும் நியாயமானது அல்ல. அண்மையில் இனத்தின் அடிப்படையில் முஸ்லீம்களின் ஜனாஸாக்களை எரிக்கப்பட்ட போது தமிழ் மக்களும் சேர்ந்துதான் அதற்கு எதிராக தமது எதிர்ப்பினை வெளிக்காட்டி இருந்தார்கள். அவ்வாறு இருக்கையில், நம்முடையது மட்டும் இரத்தம்; மற்றவர்கள் உடையது தக்காளி சட்னி, என்ற போக்கில் கல்முனையில் தொடர்ச்சியாக தமிழ் மக்களின் கோரிக்கை நிராகரிப்பது எந்த விதத்திலும் அர்த்தம் உடையதாக அமையாது..

கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகத்தில் 29 கிராம சேவகர் பிரிவுகள் காணப்படுகின்றன அதே எண்ணிக்கையான கிராம சேவகர் பிரிவுகளோடு கல்முனை வடக்கு (தமிழ்) பிரதேச செயலகமும் இயங்கி வருகின்றது. இரு செயல்கங்களுக்கும் மத்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியும் சமனானதாகவே இருக்கின்றது. ஆனால், முஸ்லிம் பிரதேச செயலகத்தில் காணப்படும் வசதிகள் வாய்ப்புகளிலும் மிக மிக குறைவாகவே வடக்கு பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

> **எல்லைகளை கடந்து நாம் ஒன்றிணைவோம். சொந்த வட்டாரம் பிரிபடும்போது பாராமுகமாக இருந்தவர்கள் எல்லைநிர்ணயமென பூச்சுத்துகின்றனர்**

உதாரணத்திற்கு, கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகத்தில் காணப்படுகின்ற, சமுர்த்தி கிளை, திட்டமிடல் கிளை, நிர்வாக கிளை, காணிப் பிரிவுகளுக்கும் 20க்கும் அதிகமான குளிரூட்டி இயந்திரங்கள் பொருத்தப்பட்டு குளிரூட்டல் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த முஸ்லீம் பிரதேச செயலகத்திற்கு 50 மீட்டருக்கு அப்பால் உள்ள தமிழ் பிரதேச செயலகத்தின் இந்த கிளைகள் எவற்றிக்கும் இந்த வசதிகள எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை.. அத்தோடு, முஸ்லிம் பிரதேச செயலாளர் பிரிவில் அனைத்து பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு குளிரூட்டல் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ் பிரதேச செயலகத்தில் பதவி நிலை உத்தியோகத்தர்கள் இருவருக்கு மட்டுமே இந்த வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. (இதனை உண்மை என நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்றால் இரண்டு காரியங்களுக்கும் நேரடியாகச் சென்று பார்வையிடுங்கள்)

ஒரே நியமனத்தையுடைய அரச உத்தியோகத்தர்களுக்கு வேலை செய்யும் இடத்தின் அடிப்படையில் கொடுக்க வேண்டிய வசதி வாய்ப்புகளை மறுப்பது எந்த வகையில் நியாயமானது...? மறுபக்கமாக இனத்தை பார்த்து வழங்கப்பட வேண்டிய உரிமைகளை வழங்காது தடை செய்து இருப்பீர்கள் எனின், ஏன் சுமார் நாற்பதுக்கும் மேற்பட்ட முஸ்லீம் உத்தியோகத்தர்களை உங்கள் காரியங்களில் இடமில்லை என்று சொல்லி அங்கு கடமைக்கு செல்ல வழி விட்டீர்கள்...?

நீங்கள் இனத்தின் அடிப்படையில் மறுத்து உரிமைகளை இன்று உங்கள் இனத்தைச் சார்ந்தவர்களும் அல்லவா அங்கு அனுபவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அங்கு கடமை புரியும் எந்த ஒரு முஸ்லிமுக்கும் எந்தவிதமான பாகுபாடும் அவர்களால் பார்க்க படவில்லையே.அதனால் அங்கு கடமை செய்யும் முஸ்லிம் உத்தியோகத்தர்கள் கல்முனை முஸ்லிம் பிரிவு பிரதேச செயலகத்தில் நிர்வாகிகள் அரசியல்வாதியின் துணையோடு தமிழ் பிரிவுக்கு இழைக்கப்படும் அநீதிகள் கண்டு தங்களுக்குள்ளேயே கூனிக் குறுகிக்கொள்கின்றனர்..

வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்தப்பட கூடாது என்று தனது சொந்த அரசியல் நலனுக்காக மட்டும் அதனை தடுத்து முஸ்லிம்களுக்கு ஒரு கண் போனாலும் பரவாயில்லை என்று 19 இற்கும் 20 இற்கும் 100 மீட்டர் ரோட்டு கொந்தராத்திற்கு சமுதாயத்தின் நலன்களை எல்லாம் காட்டிக்கொடுத்து கை உயர்த்தி தனது பாராளுமன்ற கதிரையை தொடர்ந்து தக்கவைப்பதற்கும் மக்களை மடையர் களாக்குவதற்கும் பாவிக்கும் சுலோகமே “தரமுயர்த்த கூடாது” என்பதாகும்

நமது சகோதர இனத்தையும் அவர்களின் நலன்களை நசுக்க முயற்சிப்பது எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

சகோதரர்களே முன்னூறுக்கும் அதிகமான உத்தியோகத்தர்களை கொண்டு இயங்குகின்ற வடக்கு பிரதேச செயலகம் இன்று வரை தனது சகல நடவடிக்கைகளுக்கும் கல்முனை முஸ்லிம் பிரதேச செயலாளரின் அனுமதிக்காகவும் கல்முனை முஸ்லிம் பிரதேசத்தில் கடமையாற்றுகின்ற கணக்காளரையும் எதிர்பார்த்தே நிற்க வேண்டி உள்ளதால், அந்தப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களுக்குச் செய்ய வேண்டிய சேவைகளை செய்வதில் மிக மிக காலதாமதம் ஏற்படுகிறது.

அதேபோன்று அந்த அலுவலகத்திற்கு தேவையானவற்றை செய்வதற்கும் இந்த முஸ்லிம் பிரதேச செயலாளரின் மற்றும் கணக்காளரின் நடவடிக்கைக்காக காத்திருக்க வேண்டி இருக்கின்றது. (சிறிய குண்டூசை பெறுவதற்கும் பல நாட்கள் காத்திருக்க வேண்டியுள்ளது)

உயர் அதிகாரிகளை பிரதேச அரசியல்வாதி தனது கைப்பாவைகளாக வைத்திருப்பதனால், இவர்கள் வடக்கு பிரதேசத்திற்கு உரிய நேரத்தில் ஒதுக்கப்பட வேண்டிய நிதியும் செய்து கொடுக்கப்பட வேண்டிய வசதியும் மறைமுகமாக தாமதப்படுகின்றன.

பக்கத்து வீட்டுக்காரன் பசித்திருக்க முஸ்லிம்கள் புசிக்க மாட்டார்கள் என்பர். ஆனால், இன்று 50 மீட்டர்களுக்கு அப்பால் இருக்கும் வடக்கு பிரதேசத்தின் உத்தியோகத்தர்களும் அதன் பயனாளிகளும் நன்மைகளை பெறுவதிலிருந்து தாமதிக்க/ தடுக்கப் பட்ட நிலையில், தாங்கள் (முஸ்லீம்கள்) மட்டுமே அரசினால் வழங்கப்படுகின்ற வசதிகளை முந்திக் கொண்டு அனுபவித்து மகிழ்கின்றோம். இது நியாயமானதா?

உங்கள் மனச்சாட்சியை தொட்டுக் கூறுங்கள், கல்முனை வடக்குப் பகுதியில் வாழுகின்ற தமிழ் மக்களை விட தெற்குப் பகுதியில் வாழ்கின்ற முஸ்லிம் மக்கள் ஏழைகளா? முதலில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியவர்கள் யார் ?

தொடர்ச்சி 9ஆம் பக்கம்...

பரிமாணம் கல்முனை NET kalmunainet.com உண்மையின் முகம்
Parimanam
தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்
வெளியீடு: கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
எல்லை வீதி, கல்முனை 01.
kalmunainet@gmail.com | +94 76 2933026 | +94 77 3457915

## நெருக்கடி நிலைக்கு தீர்வுதான் என்ன?

புதிய பிரதமரும் அமைச்சரவையும் பதவி ஏற்றாலும், நாடு ஸ்திரமான நிலையில் இல்லை. சமையல் எரிவாயுக்கும் எரிபொருள்களுக்கும் வரிசையில் காத்திருக்கும் நிலை தொடர்கிறது. பால் மாவுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு...

டொலர்... டொலர்... என்று கூறிக்கொண்டே பொருட்களின் விலை கண்டபடி அதிகரிக்கப்பட்டு கொண்டே இருக்கிறது.

தூங்கி எழும்பும் போதே மக்களுக்கு படபடப்பு தான். எந்தப் பொருளுக்கு என்ன விலை என்று அறிந்து கொள்வதுதான் விடியலின் தின பணியாக இருக்கிறது.

எரிபொருட்களின் விலை கடந்த செவ்வாயன்று கடுமையாக அதிகரிக்கப்பட்டுள்ளது. சராசரியாக பார்த்தால் லீட்டர் ஒன்றின் விலை 450 ரூபாய். வாழ்க்கையின் சகல மட்டங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் அதிகரிப்பு இது. எரிபொருள் விலை அதிகரிப்புக்கு விலை சூத்திரம் தான் காரணமாக காட்டப்பட்டாலும், இதன் பின்னணி பாரதூரமாக தெரிகிறது

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் நஷ்டத்தில் இயங்குவதாக அரசு கூறி வருகிறது. இதனை விலை அதிகரிப்பின் மூலம் சமாளிக்கலாம் என்றும் அரசும் புதிய பிரதமரும் திட்டம் தீட்டுகின்றனர். பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நஷ்டத்தில் இயங்குகிறது என்பது உண்மை. ஆனால், அந்த நிறுவனத்தின் முகாமைத்துவ தவறினால் ஏற்பட்ட நெருக்கடிக்கு மக்கள் சுமையை தூக்க முடியாது.

இதே போல் தான் இப்போது எல்லாமே நடந்து கொண்டிருக்கிறது. செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்துவதும் விலையை கண்டபடி அதிகரிப்பதும் தினமும் நடக்கும் அநாகரிகங்கள் ஆகிவிட்டன. மக்களும் என்னவிலை என்றாலும், சாமான் கிடைத்தால் போதும் என்ற மனநிலைக்கு வலிந்து தள்ளப்பட்டிருக்கிறார்கள். நெருக்கடி நெருக்கடி என்று பறை அடித்துக் கொண்டிருக்கும் அரசு இன்னும் உருப்படியாக எதுவும் செய்ததாக இல்லை.

விலை அதிகரிப்பில், அரசியல் நடத்துவதும் அரசியலுக்குள் நாட்டை சிறைப்பிடித்து வைத்திருப்பதும் நெருக்கடி நிலைக்கு தீர்வு காணும் முயற்சியாக தெரியவில்லை.

அரசியலமைப்புக்கான 21ஆவது திருத்தம் பற்றி பேசப்படுகிறது. அதற்கான யோசனைகளும் முன்வைக்கப்படுகின்றன. இதுவும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுமா? என்பது சந்தேகம் தான். அதுவும் கட்சி அரசியலுக்குள் சிக்கிக் கொண்டுள்ளது. இன்றைய நெருக்கடிக்கும் நிறைவேற்று அதிகாரமும் காரணம் என்பதனால்தான், 21ஆவது திருத்தம் முன்வைப்பதற்கு சகல கட்சிகளும் முன்வந்தன. பசில் தலைமையிலான பொதுஜன பெரமுன தான் நினைத்ததை பாராளுமன்றம் செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறது. பிரதி சபாநாயகர் தெரிவின் போது இந்தக் கட்சியின் செயல்பாடு வெளிச்சத்துக்கு வந்தது. பிரதி சபாநாயகரை தெரிவு செய்வதற்காக நடந்த இரகசிய வாக்கெடுப்பில் பொது சன பெரமுன ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் ஒரு செய்தியைத் தெளிவாக சொல்லி இருக்கிறது.


அரசியலமைப்புக்கான 21ஆவது திருத்தம் சபைக்கு வரும்போது இரட்டை பிரஜாவுரிமையை நீக்கும் யோசனையை தடுக்கும் முயற்சிகளில், பொது ஜன பெரமுன ஈடுபட உள்ளதாக தெரியவருகிறது. இங்கு பிரச்சனை என்னவென்றால், மக்களால் நிராகரிக்கப்பட்ட கட்சியும் தோற்றுப்போன அதன் அரசாங்கமும் மீண்டும் புத்துயிர் பெற மாறுவேடம் பூண்டு செயல்பட தொடங்கியுள்ளது. மக்களை படுகுழியில் தள்ளி விட்டு அரசியல் களம் இறங்கி செயல்படும் இத்தகைய சக்திகள் அடித்து விரட்டப்பட வேண்டியவர்கள். வாக்களித்த மக்களே வெளியேறும்படி கூறினால், ஒதுங்கிச் செல்வதுதான் ஜனநாகமும் நாகரிகமும். தொட அறுபத்தி ஒன்பது இலட்சத்தை பேசிக்கொண்டிருப்பது மக்களை மறந்த செயல்பாடு மட்டுமல்ல, நெருக்கடியை வைத்துக்கொண்டு இருக்கவே ஜனாதிபதியும் ஆட்சியாளர்களும் விரும்புகிறார்கள் என்பதுதான் யதார்த்தமான உண்மை யாக தெரிகிறது.

மாதத்துக்கு இரண்டு வாரங்கள் கூடும் பாராளுமன்றம் கூட உருப்படியாக எதுவும் மக்கள் பிரச்சனைக்கு தீர்வு கண்டதாக இல்லை. 225 பேரும் ஏதோ கூடுகிறார்கள்; பேசுகிறார்கள்; கலைகிறார்கள். ஒருவேளை உணவுக்காக மக்கள் படும் துன்பங்களை இவர்கள் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை.

ஆகவே, மக்களின் அன்றாட பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். அதற்கு, கட்சி அரசியலை கையில் எடுக்காத முயற்சி மாத்திரமே மக்கள் பிரச்சனைக்கு தீர்வாக அமையும்

# ரணிலுக்கு பதில் புதிய பிரதமரை கொண்டு வர பெரமுன பிரயத்தனம்

## மொட்டை மீண்டும் மலரச் செய்ய திரைமறைவு முயற்சி



புதிய பிரதமர் ஒருவரை கொண்டு வந்து மொட்டு ஆட்சியை மீண்டும் மலர செய்வதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பகீரத முயற்சி களை முடுக்கி விட்டு உள்ளது.

அரசமைப்புக்கான 21 ஆவது திருத்தத்தை தோற்கடிப்பதன் மூலம் பிரதமர் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்குகின்ற வியூகத்தை திட்டமிட்டு உள்ளனர்.

இது தொடர்பாக பெரமுன தலைமையகத்தில் கடந்த 26 ஆம் திகதி முக்கியமான மந்திரா லோசனை கூட்டம் இடம்பெற்றது. இதில் 21 எம். பிகள் பங்கேற்றனர்.

21 ஆவது திருத்த சட்டம் தற்போதைய தேவையே அல்ல, மக்களின் அன்றாட, அடிப் படை பிரச்சினைகளுக்கே தீர்வு காணப்பட வேண்டும் என்று பெரமுனவின் பொது செய லாளர் சட்டத்தரணி சாகல காரியவசம் தெரிவித்தார்.

# ஜனாதிபதியை பாதுகாக்கும் திருத்தத்தை ஏற்கப் போவதில்லை

## 21 ஆவது திருத்த யோசனைக்கு எதிராக தமிழ் கட்சிகள் போர்க்கொடி



**தர்மேந்திரா**

நாடு எதிர்கொள்ளும் நெருக்கடி நிலைக்கு தீர்வு காணும் வகையில், நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க வேண்டும் என்ற ஏகோபித்த முடிவு இப்போது இரண்டாம் பட்சத்துக்கு தள்ளப்பட்டு இருப்பதாக தமிழ் கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.

19 ஆவது திருத்தத்தை கொண்டு வருவதனை முதலாவது இடத்திற்கு கொண்டு வந்து, நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்கும் திட்டத்தை இரண்டாம் பட்சம் ஆக்கி இருக்கின்றது ரணில் விக்கிரமசிங்கவின் 21 ஆவது திருத்தம் என தமிழ் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதியையும் நிறைவேற்று அதிகாரத்தையும் பாதுகாக்கும் ரணிலின் திட்டத்தை நாம் ஒருபோதும் ஏற்கப் போவதில்லை என்றும் சுமந்திரன் எம். பி தெரிவித்தார்.

அரசியலமைப்புக்கான 21 ஆவது திருத்தம் கொண்டு வரப்படுகின்றது என கூறி கொண்டு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாமல் செய்வதை இதில் இரண்டாம் கட்ட விடயம் ஆக்கி பின்னிலைப்படுத்தி உள்ளனர்.

அதாவது, 19 ஆவது திருத்த சட்டத்தை மீண்டும் அமுலுக்கு கொண்டு வருவதே இதில் முன்னிலைப்படுத்தப்பட்ட விடயமாக உள்ளது.

பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி வைத் திருக்கலாம் என்கிற விடயத்தில் பிரதமர் ரணில் மெத்தன போக்கையே காட்டுகின்றார்.

இந்நிலையில், அரசாங்கத்தின் பங்காளி அல்லாத தமிழ் கட்சிகள், 21 ஆவது திருத்தம் தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப் பட்ட சர்வ கட்சி கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

இதனால், தமிழ் தேசிய கூட்டமைப்பு அடங்கலான தமிழ் கட்சிகளின் அபிப்பிராயத்தை பெற வேண்டி இருப்பதால், மீண்டும் ஒரு கூட்டம் எதிர்வரும் வெள்ளிக் கிழமைக்கு ஒழுங்கு செய்யப்பட்டு உள்ளது.

இந்நிலையில், அமைச்சரவைக்கு உத்தேச திருத்த சட்டத்தை சமர்ப்பிப்பதிலும் தாமதம் ஏற்பட்டு உள்ளது. நாம் இது தொடர்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் எம். பியை தொடர்பு கொண்டு கேட்டபோது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும், ஜனாதிபதி முறைமையையும் பாதுகாக்கின்ற திருத்தத் தில் உடன்பாடு கிடையாது என்றும், வர்த்தமானியில் திருத்தத்தின் இறுதி வடிவம் வெளிவந்த பிற்பாடு கூட்டமைப்பு அதன் யோசனைகளை முன்வைக்கும் என்றும் தெரிவித்தார்.

ரெலோ பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் எமக்கு கருத்து கூறுகையில்; இத்திருத்தத்தில் உருப்படியாக எதுவும் இருப்பதாக தெரியவில்லை, தமிழ் கட்சிகள் மட்டத்தில் கூடி ஆராய்ந்து உத்தேச யோசனை களை முன்வைக்கின்ற ஒரு முயற்சி பரிசீலிக்கப் படுகின்றது என்றார்.

இதே நேரம், தமிழ் முற்போக்கு கூட்டணி யின் தலைவர் மனோ கணேசன் கூறுகை யில், மாகாண சபை தேர்தல் முறைமை யை இல்லாமல் செய்யவும், தேர்தல் முறை மையை மாற்றவும் 21 ஆவது திருத்தத்தை கையில் எடுத்து உள்ளனர் என்று விளங்குகின்றது, ஆகவே, இதை ஆதரிக்க முடியாது என்றார்.

இதே நேரத்தில், இத்திருத்தம் தொடர்பாக பொதுஜன பெரமுன கூறுபட்டு கிடக்கின்றது என்று தமிழ் கட்சிகள் விசுவாசிக்கின்றன. ஜனாதிபதி முறைமை பாதுகாக்கப்பட வேண்டும் என்று ஒரு சாராரும், இல்லை அது இல்லாமல் ஒழிக்கப்பட வேண்டும் என்று இன்னொரு சாராரும் உள்ள நிலையில், இரட்டை பிரஜாவுரிமை இல்லாமல் செய்யப்பட கூடாது என்கிற நிலைப்பாட்டில் பசில் ராஜபக்ஷ ஆதரவு அணியினர் வலுவாக உள்ளனர் என்று சுட்டி காட்டப்படுகின்றது.

# தேர்தலில் வெற்றிபெற முடியாதவர்களின் சூதாட்டமே 21ஆவது திருத்தம்: சஜித்



தேர்தலில் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதி யாக முடியாதவர்கள் சதித் திட்டத்தின் மூலம் ஜனாதிபதியாவதற்காக முன்னெடுக்கப்படும் அரசியல் சூதாட்ட மே 21ஆவது திருத்தம் ஆகுமென எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் இந்தக் கருத்தை அவர் கூறினார்.


அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் ஆனது அனைவராலும் எதிர்பார்க்கப்படும் மாற்றத் திற்கான வழி அமைப்பதாக இருக்க வேண்டும்.

அதற்காகவே, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கி, சர்வாதிகார ஆட்சிக்கு வழி வகுத்த 20 ஆவது திருத்தத்தை ரத்து செய்து, சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்ட கூடிய அரசியலமைப்பு திருத்தம், தனிநபர் பிரேரணையாக ஐக்கிய மக்கள் சக்தியினால் முன்வைக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவினால் தனிநபர் பிரேரணை முன்வைக்கப்பட்டது. இதனை வெற்றிகொள்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்தும் முன்னோக்கி செயல்படும் என்றும் அவர் கூறினார்.

# கச்சதீவை விட்டுக்கொடுக்க முடியாது:

## பாதுகாப்பில் இந்தியாவுக்கு அச்சம் வேண்டாம்



கச்சதீவை விட்டுக் கொடுக்க முடியாது. இந்தியாவின் பாதுகாப்பு விடயத்தில் இந்தியா அச்சம் கொள்ளத் தேவையில்லை என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று (29) இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாரதப் பிரதமர் தமிழ் நாட்டிற்கு வந்திருந்த போது கச்சதீவு பிரச்சனை அதில் எழுப்பப்பட் டுள்ளது. கச்ச தீவை மீட்பதற்கு இது சரியான தருணம். ஆகவே அதனை மீட்க வேண்டும் என்ற கோரிக்கை தமிழ முதலமைச்சர் ஊடாக பாரத பிரதமரிடம் முன் வைத்தது மன வருத்தம் தருகின்றது.

இந்திய அரசாங்கம் இலங்கையில் பொருளா தாரப் பிரச்சனை ஏற்பட்ட போது முதன் முதல் உதவி செய்த அரசாங்கமாக உள்ளது. பல உதவி களை அவர்கள் செய்து வந்தார்கள். அதே நேரத்தில் தமிழ் நாட்டு முதலமைச்சர் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் வாழும் மக்க ளுக்கு உதவி செய்ய காத்திருக்கின்றோம் என்ற கருத்தை முன் வைத்த போது எங்களுடைய தரப்பில் இலங்கையில் வாழும் அனைத்து மக்க ளுக்கும் தமிழ் நாடு உதவி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை நாம் முன்வைத்தோம்.

இந்த பொருளாதாரப் பிரச்சனை சிங்கள மக்களையும் பாதித்திருக்கிறது. இது தான் தமிழர் பண்பாடு என்ற விடயத்தை முதலமைச்சருக்கு எடுத்துக் கூறினோம். இலங்கை பூராகவும் அவர்களுடைய உதவி வந்து கொண்டிருகிறது.

அத்துடன் இந்தியாவில் ஒரு சிறுமி சைக்கிள் வாங்க வைத்திருந்த பணத்தை எங்களுடைய மக்களுக்கு கொடுக்கின்ற நெகிழ்ச்சியான விடயத்தைப் பார்க்க முடிந்தது. அன்றாடம் பிச்சை எடுத்து வாழும் ஒரு பெரியவர் தனது பணத்தை இலங்கை மக்களுக்கு கொடுக்கின்ற நிகழ்வையும், ஒரு தேநீர் கடைக்காரர் பலரையும் கூப்பிட்டு தேநீர் அருந்த வைத்து அவர்களிடம் விரும்பிய பணத்தை தரும்படி கேட்டு அதனையும் வழங்கியிருந்தார். இவ்வாறு தமிழ் நாட்டு மக்கள் இலங்கைப் பொருளாதாரப் பிரச்ச னைக்கு பாரிய நல்லெண்ணத்துடன் உதவி செய்துள்ளார்கள். அந்த உதவி எங்களால் மறக்க முடியாது. தமிழ் நாட்டு மக்கள் மற்றும் தமிழ் நாட்டு அரசாங்கத்தை நாம் மறக்க முடியாது. தமிழ் நாட்டு அரசாங்கம் அன்று முதலே தமிழ் நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து செயற்படுகிறது.

உண்மையில் கஸ்ரப்படுகின்ற நிலையில் இருக்கும் போது கச்சதீவைப் பெறுவதென என தமிழக முதல்வர் எண்ணியது கவலை தருகிறது. இதனால் மனவருத்தம் அடை கின்றோம். தமிழர்களுக்கு தற்போதைய தமிழக முதல்வரின் தந்தையார் பாரிய சேவை களை செய்துள்ளார். இந்த நிலையில் கஸ்ரமான நிலையப் பயன்படுத்தி கச்சதீவை இந்தியா பெற முயல்வது ஏற்றுக் கொள்ள முடியாது. கச்சதீவைப் பொறுத்தவரை அதில் எங்களது மீனவர்கள் பயன்பெறும் வாய்ப்பு கூட இருக்கிறது. கச்சதீவை விட்டுக் கொடுக்க முடியாது. அது தமிழர்களின் தீவாக உள்ளது.

வடக்கில் வாழும் தமிழர்கள் பயன்படுத்தும் தீவாக இருக்கின்ற போதும், இந்தியாவிற்கு பங்கம் ஏற்படும் வகையில் அதனை பயன்படுத்த தமிழ் மக்கள் ஒரு போதும் அனுமதியளிக்க மாட்டார்கள். அதனால் இந்திய தனது பாதுகாப்பு விடயத்தில் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

பாரத பிரதமர் கூட இலங்கை தமிழர்களை காப்பாற்ற முயற்சிப்போம் என கூறிய நிலையில் தமிழக முதல்வர் கூறியதை ஏற்க முடியவில்லை. இலங்கை தமிழ் மீனவர்கள் எப்போதும் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சு றுத்தலாக இருக்க மாட்டார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# IMF உதவி தாமதித்தால் மேலும் அதிகரிக்கும் நெருக்கடி



ஏ. எல். எம். அஸ்லம் PhD
பொருளியல் நிபுணர்

நிலையற்ற பொருளாதார கொள்கை மற்றும் இனத்துவ சிந்தனை என்பன இலங்கையின் தீவிர சமூகப் பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைக்கு காரணிகளாகக் காணப்படுகிறன. இதன் விளைவு இலங்கை ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்புவதற்கான நாட்டு மக்கள் கோஷத்துடனான வீதியிறங்கலாகும். நான்கு வாரத்தினை அண்மித்த மக்கள் போராட்டம் ஒரு கிளர்ச்சியாக உருவெடுப்பதற்கு இன்னும் தூரமில்லை என்பது மட்டும் வெளிப்படையான விடயம். இதற்குக் காரணம் என்னவென்று அவதானிக்கும்போது பல்வேறு விடயங்களைக் குறிப்பிட்டுக் கூறமுடியும் என்ற போதிலும் அசுரவேக விலையேற்றம், பொருட் தட்டுப்பாடு என்பன பிரதான காரணிகளாகும்.

பொருட் தட்டுப்பாடு என்பது இரு வழிகளில் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது. அவை முறையே உள்நாட்டில் உற்பத்தியளவு போதியளவில் இல்லாமை மற்றும் வெளிநாட்டிலிருந்து பொருட்களை கொள்வனவு செய்யக்கூடிய இயலளவு காணப்படாமை என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்விரு விடயங்களும் இலங்கை போன்ற வளர்முக நாடுகளுக்கு பெரும் சவாலாகவே உள்ளது. ஏனெனில், இவை இரண்டு செயற்பாடுகளையும் வழிநடாத்தும் காரணி அந்நியச்செலாவணி என்ற எண்ணக்கருவாகும். அதாவது, சாதாரண மொழிநடையில் குறிப்பிடுவதாயின் அமெரிக்க டொலரின் கிடைப்பனவு மற்றும் இருப்பு என்பனவே நாடுகளின் பொருளாதாரங்களை வழிநடாத்துகின்றது என்று குறிப்பிடலாம்.

**நன்மதிப்பை இழந்த கோட்டா அரசால் முதலீடுகளை எதிர்பார்க்க முடியாது**

ஒரு நாட்டுக்கு அந்நியச் செலாவணியை அதாவது, டொலர் உட்பாய்ச்சலை ஏற்படுத்தும் பல காரணிகள் காணப்படுகின்றன. அவற்றில் குறிப்பாக வெளிநாட்டு நேரடி முதலீடு, மரபு மற்றும் மரபுசாரா ஏற்றுமதி, புலம்பெயர்ந்தோரின் பணவனுப்புதல்கள் மற்றும் சுற்றுலாத்துறை வருமானம் என்பனவற்றை அடிக்கோடிட்டுக் குறிப்பிடலாம்.

வெளிநாட்டு நேரடி முதலீட்டில் நேரடியாகத் தாக்கம் செலுத்தும் காரணி அம்முதலீடு மேற்கொள்ளப்படும் நாட்டின் அரசியல் ஸ்த்திரத்தன்மை ஆகும். அதாவது, ஆட்சியாளர்கள் மீது முதலீட்டாளர்கள் வைத்துள்ள நம்பிக்கையைப் பொறுத்து அது மாறுபடும். அது இலங்கையைப் பொறுத்தமட்டில் கேள்விக்குறியாகும். ஏனெனில் தற்போதைய கோட்டாபய அரசு வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நன்மதிப்பினை இழந்துவிட்டனர்.

எனவே, வெளிநாட்டு அந்நியச் செலாவணியை வெளிநாட்டு நேரடி முதலீடாக வரவழைப்பதில் அரசாங்கம் தோற்று விட்டது.

இலங்கை இருவகையான ஏற்றுமதிகளை கையாளுகின்றன. அவை முறையே மரபுசார்ஏற்றுமதியானதேயிலை, தெங்கு, மற்றும் இறப்பர். அதுபோல மரபுசாரா ஏற்றுமதியான தைத்த ஆடை என்பனவாகும். முதலாம் வகை விவசாயத்துடன் தொடர்புபட்ட ஒன்று இதற்குப் பிரதானமாகத் தேவைப்படுவது இரசாயண உரமாகும். தற்போதைய அரசு இரசாயண உரங்களை இறக்குமதி செய்வதில்லை என்ற கொள்கையை கடைப்பிடிப்பதனால் மரபுசார் ஏற்றுமதி மூலம் இதுவரையில் உழைத்துக் கொண்ட அந்நியச் செலாவணியை இழக்க வேண்டிய நிலைமை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. அதுபோல், மரபுசார்ஏற்றுமதியான ஆடைக் கைத்தொழிலுக்குத் தேவையான உள்ளீடுகளில் பெரும்பாலானவை இறக்குமதி மூலமே மேற்கொள்ளப்படுகிறது. எனவே, அரசு இறக்குமதியை தடைசெய்தமையினால் இதன் மூலம் உழைத்துக் கொள்ளப்பட்ட வருமானத்தினையும் இழக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இலங்கையின் மொத்த சனத்தொகையில் சுமார் 0.9 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் பல்வேறு காரணங்களால் உலகின் எல்லாப்பாகங்களிலும் பரந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்கள் அனுப்பும் பணவனுப்புதல்கள் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 சதவீதத்திற்கும் அதிகமாகும். இலங்கையின் பொருளாதார ஸ்த்திரமின்மை காரணமாக சர்வதேச புலம்யெர்ந்தவர்களின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட அந்நியச் செலாவணியை இலங்கை இழந்தது. இத்தொகையானது, இலங்கையின் பொருளாதாரத்தில் அந்நியச் செலவாணி உழைப்பில்

முதல் நிலையிலிருந்த வருமான மூலம் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை ஆட்சியாளர்கள் அண்மைக்காலமாக அந்நியச் செலாவணியை உழைத்துக் கொள்வதற்காக கவனம் செலுத்தும் துறையே சுற்றுலாத்துறை. இத்துறை 2019ம் ஆண்டுக்குப் பின்னர் எதிர்பார்த்த வருமானத்தை ஈட்டித் தரவில்லை. ஏனெனில், ஈஸ்டர் தாக்குதல், கொவிட் தொற்று ரஷ்ய- உக்ரைன் போர் என்பன சர்வதேச சுற்றுலாப் பயணிகளை இலங்கை நோக்கி வருவதற்கு தடைப்படுத்திய காரணிகளாகும். இத்தகைய காரணிகளால் இலங்கை தொடராக சுற்றுலாத்துறை மூலம் உழைத்துக் கொண்ட அந்நியச் செலாவணி வருமானத்தை இழந்தது.

**நெருக்கடியைச் சமாளிப்பதில்தான் இலங்கையின் எதிர்காலம்**

தொகுப்பாக நோக்கும்போது, மேற்குறிப்பிட்ட வருமான மூலங்களிலிருந்து அந்நியச் செலாவணியை இழந்தபோது, அரசின் பிழையானவெளிநாட்டுவர்த்தகக்கொள்கை இலங்கை மீது வெளிநாடுகளின் நம்பிக்கை இழப்பிற்கு காரணமாக அமைந்தது. இந்நிலை மரத்தால் விழுந்தவனை மாடு மிதித்த கதையாக வெளிநாட்டு உதவிகள் மற்றும் கடன் என்பனவற்றை வழங்குவதிலிருந்தும் உலகநாடுகள் தவிர்ந்திருக்க முற்பட்டன. எனவே, இது இலங்கையின் பொருளாதாரத்தை மேலும் சிக்கலுக்குள் தள்ளியது.


இவ்வாறன நிலைமையினால்தான் இலங்கை மத்தியவங்கி அரசின் ஆதரவுடன் பண அச்சடிப்பினை மேற்கொண்டு ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினையை நிவர்த்தி செய்து கொள்ள முயற்சித்தது. எனினும், அம்முயற்சியானது பொருளாதார கோட்பாடுகளுக்கு முரணாகக் காணப்பட்டதனால் இலங்கையின் பொருளாதாரத்தை பணவீக்கம் மேலும் சிக்கலுக்குளாக்கியது.அதன் பயனைத்தான் தற்போது இந்நாட்டு மக்கள் பொருட்களின் விலையேற்றம் ஊடாக அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

அதாவது, இலங்கை ரூபா அதன் மெய்ப்பெறுமதியினை இழந்துள்ளது என்று குறிப்பிடலாம்.

நிலைமை தீவிரமடைந்தபோது, இலங்கை அரசு மாற்றுத் தீர்வை எடுக்க வேண்டிய கட்டாய நிலைமைக்குள் சென்றது. அதன் பயனாகத்தான் சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டமையை குறிப்பிட முடியும்.

எனினும், சர்வதேச நாணய நிதியத்திடம் பணம்பெறுவதற்கு பல்வேறு தகுதி விதிகளை இலங்கை அரசு பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயக் கடப்பாடு காணப்படுகிறது. அத்தகுதி விதிகளைப் பூர்த்தி செய்யும்போதே சர்வதேச நாணய நிதியம் கடன்களை விடுவிக்க ஒப்புதலளிக்கும். இந்த தகுதிவிதிகளை பூர்த்தி செய்யக்கூடிய இயலுமை, இலங்கையிடம் தற்போது உள்ளதா?என்று பார்க்கும்போது அதற்கான தெளிவான பதில் இல்லை என்பதாகும்.

எனவே, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கும் உதவி பின்தள்ளிச் செல்லும்போது, இலங்கையின் பொருளாதார நெருக்கடி மென்மேலும் அதிகரித்துச் செல்லுவதனை யாரும் தடுக்க முடியாது. எனவே, இலங்கை அரசு இந்த நெருக்கடியினை எவ்வாறு சமாளிக்கப் போகிறது என்பதிலேயே இலங்கைப் பொருளாதாரத்தின் புத்தெழுச்சி தங்கியிருக்கிறது.





# மாஸ்டர் சிவலிங்கம்

சில மனப்பதிவுகள்:

**பேராசிரியர் மௌனகுரு**

மாஸ்ட்ர் சிவலிங்கம் காலமானார் எனும் செய்தியை முக நூலில் பார்த்தேன், அவசியம் சென்று பிரியாவிடை கூற வேண்டிய மனிதர் அவர்.

செல்லும் நிலையில், நான் இல்லை. அவரது இறுதி நிகழ்வில் கலந்து கொள்ளாமை மிகுந்த வருத்தமே. பழுத்த ஓலைகள் விழுகின்றன, காலத்தின் நியதி அது.

'மாஸ்டர்' என்ற சொல் ஒரு காலத்தில் மட்டக்களப்பில் சிவலிங்கம் அவர்களையே குறிக்கும் சொல்லாக இருந்தது. இத்தனைக்கும் அவர் ஓர் பாடசாலை மாஸ்டர் அல்ல. பாடசாலையில் படிப்பிக்காத அவருக்கு பல்நூற்றுக் கணக்கான மாணவர்கள் இருந்தனர். மாஸட்ராகஅல்லமாமாவாகஅவர் குழந்தைகளின் உளத்தில் கொலுவீற்றிருந்தார். அவரது மறைவு இயற்கையானது. அவர் தனது 89 ஆவது முது வயதில் காலமானார். இருந்திருந்தால் அடுத்த ஆண்டில் அவரது 90 வயதைக் கொண்டாடியிருப்போம்.

மாஸ்டர் சிவலிங்கம் அவர்களை அனைவரும் ஒரு கதைசொல்லியாக அதிலும் சிறுவர்களுக்கான கதைசொல்லியாக மாத்திரமே பார்க்கிறார்கள். முகநூலில் அப்படியொரு பிம்பமே உருவாகி இருந்தது. நான் அறிந்த மாஸ்டர் சிவலிங்கம் இன்னும் வித்தியாசமானவர். அவருடனான முதல் சந்திப்பு பசுமையாக ஞாபகம் இருக்கிறது.

அப்போது நான் வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கிறேன். காற்சட்டை போடும். வயது 13. எட்டாம் வகுப்பு அன்று. பாடசாலை பாரதி விழா கொண்டாடுகிறது. அதற்கு அவர்கள் அன்றைய மட்டக்களப்பின் பிரபல பேச்சாளர்களான பிரபலமான செ. இராசதுரை, கமலநாதன் (அவர் வித்துவான் ஆகாத காலம் அது) எஸ் பொன்னுதுரை ஆகியோரையும் அவர்களுடன் சிவலிங்கத்தையும் அழைத்திருந்தனர்.

முன்னவர் இருவரும் தமிழரசு கட்சி மேடைகளில் விளாசித் தள்ளி மக்கள் மத்தியில் பிரபலமானவர்கள். எஸ் பொன்னுத்துரை இன்னொரு விதத்தில் பிரபலமானவர். அவர்கள் அனைவரும் சிவலிங்கத்திலும் வயது கூடியவர்கள். சிவலிங்கத்தை மட்டக்களப்பு அதிகம் அறியாத காலம் அது. சிவலிங்கம் அப்போதுதான் தமிழ்நாட்டு வாசம் முடித்து மட்டக்களப்பு திரும்பியிருந்தார்.

தமிழ்நாடு சென்று வருவது என்பது அன்று பெரிய விடயம். சிவலிங்கம் தனது பேச்சில் தனது தமிழ் நாட்டு அனுபவங்களைச் சுவையாக கூறினார். அவர் அப்போது ஒரு மிமிக்கிறிக் கலைஞராக வளர ஆரம்பித்த காலம் அது. அவர் அன்றைய முதலமைச்சர் காமராஜர்போல, திராவிடக் கழக தலைவர் ஈ வே ரா போல, திராவிட முன்னேற்றக் கழக தலைவர் அண்ணாதுரை போல, கருணாநிதி போல. சினிமா நடிகர் என் எஸ் கிருஸ்ணன் போல, சிவாஜி கணேசன் போல தனது குரலை மாற்றி மாற்றி செய்து அவர்கள் பேசுவதுபோல பேசிக் காட்டினார். சிறுவர்களாகிய எங்களுக்கு ஒரே ஆச்சரியம். குசி சந்தோசம் கைதட்டல் பெரு வியப்பு.

'பச்ச எடுத்து முஸ்துல அடிச்சன் ஜஸ்து புடிஸ்து' என்று மெட்ராஸ் தமிழை அப்படியே கூறி அதற்கான அர்த்தத்தையும் விளக்கினார். பச்சத் தண்ணியை எடுத்து முகம் கழுவினேன் ஜலதோசம் பிடித்துகொண்டது என்றது அதன் அர்த்தம். பஸ்து என்றால் பச்சத்தண்ணி என்பது அர்த்தம், முஸ்து என்றால் முகத்தில் என்பது அர்த்தம், ஜஸ்து என்றால் ஜலதோசம் என்பது அர்த்தம், புடிஸ்து என்றால் பிடித்து கொண்டது என்பது அர்த்தம்.


என அவர் விளக்கியபோது எமக்குப் புதிய உலகங்கள் விரிந்தன. கிருஸ்ணா ஒயில் உங்களுக்குத் தெரியுமா? என சிறுவர்களான எங்களிடம் கேட்டார், தெரியாதே என்றோம். ஒயில் என்றால் எண்ணெய் என்பது தெரியும். லாம்பெண்ணெய், தேங்காய்எண்ணெய்தான் நாம் அறிந்த எண்ணைய்கள்- ஒயில்கள். இது என்ன கிருஸ்ணா ஒயில்? கிரெசன் ஒயிலை மெட்ராஸ்காரன் கிருஸ்ணா ஒயில் என்று அழைத்ததை 'கிருஸ்ணா ஒயில்... கிருஸ்ணாஒயில்... வாங்கோ வாங்கோ...' எனஅப்படியே கூவிக்காட்டினார். அவரது உடல் குரல் கண் அனைத்தும் பேசின. மிகச் சிறந்த பேசாளர்களான செ, இராசதுரை கமலநாதன்எஸ் பொன்னுதுரைஆகியோரின் பேச்சுகளை விட எம்மை அன்று மிகவும் கவர்ந்தது சிவலிங்கத்தாரின் பேச்சே.

இந்தச் சிவலிங்கம் இந்தியா சென்றிருக்கிறார். நாம் நூல்களில் படித்த ஈ வே ரா பெரியார். அண்ணதுரை கருணாநிதி போன்றோரைக் கண்டிருக்கிறார். அவர்களோடு பேசியிருக்கிறார். நாம் திரைப்படங்களில் கண்டு பிரமித்த என் எஸ் கிருஸ்ணன் சிவாஜி கணேசன் போன்ற சினிமா நடிகர்களைக் கண்டு உரையாடியுள்ளார் என்ற பிரமிப்பு. அப்பிரமிப்பு சிவலிங்கத்தார் மீதும் ஓர் பிரமிப்பை ஏற்படுத்தியது. அந்தப் பிரமிப்பு தொடர்ச்சியாக அவர் செயல்கள் மூலம் வளர்ந்து வந்தது. இது இன்னொரு அனுபவம்.

எனது 15 ஆவது வயதில் என நினைக்கிறேன் அப்போது அவருக்கு 25 வயது இருக்கும் சங்கிலியன் நாடகம் என நினைவு சிவலிங்கமும் அந்த நாடகத்தில் நடிக்கிறார். அதில் ஒரு காட்சியில் அவருக்கு அரசன் கோபத்தோடு ஏச சடாரென்று முகத்தை அவர் திருப்பி அஸ்டகோணலாக்கிய காட்சி அப்படியே ஞாபகம் வருகிறது. அது நடந்தது புதிதாகக் கட்டப்பட்ட மட்டக்களப்பு நகர மண்டபத்தில். என் அருகில் உட்கார்ந்திருக்கிறார் பாலு மாஸட்ர், அவர் ஒரு நாடக ஆசிரியர் அத்தோடு அவர் ஒரு பகுத்தறிவுவாதியும் கூட. எல்லாவற்றையும் எல்லாரையும் கிண்டல் பண்ணும் இயல்பினர். அப்படியான அவரே சிவலிங்கத்தாரின் அந்தக் கண்நேர நடிப்பில் மயங்கிச் 'சபாஸ் சிவலிங்கம்' என்று கூவி விட்டார்.

சபையிலிருந்து மாஸ்டர் சிவலிங்கத்திற்குக் கிடைத்த அந்தப் பாராட்டு. இப்போது ஞாபகம் வருகிறது. ஆம் மாஸட்ர் சிவலிங்க சிறந்தவோர் நடிகர் பின்னாளில் நகைச்சுவை நடிகர் இந்த நகைசுவையை அவர் வளர்த்தெடுத்து பின்னாளில் குழந்தைகளுக்குக் கதை சொல்லும் நகைசுவை மாமாவும் ஆனார்.

1950கள்மட்டக்களப்பில்திராவிடதிராவிட முனேற்றக் கருத்துகள் இளைஞரை தீவிரமாக வசீகரித்த காலங்களாகும். வெலிங்டன் புத்தகசாலை இந்நூல்களை விற்கும் மத்திய நிலையமாக இருந்தது. இந்நுல்களும் பகுத்தறிவுக் கருத்துகளும் அன்றைய துடிப்பான இளைஞர்களைப் பற்றிகொண்டன. இவர்கள் தம்மை சுமரியாதைக்காரர் என அழைத்து கொண்டனர் மக்கள் அவர்களைச் சுனாமானா என அழைத்தனர்.



## சிறுவர்களை மகிழ்வித்த 'கதைசொல்லி'

எஸ் டி சிவநாயகம்,
பித்தன்,
செ. இராசச்துரை,
வித்வான் கமலநாதன்,
இரா. பத்மநாதன்,
ஓவியர் குமார்,
காசி ஆனந்தன்,
தங்கவடிவேல்,
அற்புதராஜா குரூஸ்,
சற்றடே கந்தசாமி,
முருகேசு,
ஆரோக்கியம்,
ம. த. லோறன்ஸ்,
ஆரையூர் அமரன்

நவம் என என் மனதில் அவர்கள் வரிசையாக ஞாபகம் வருகின்றனர். இவர்கள் கோவில் போராட்டங்கள் நடத்தினர். கோவில்களில் பலிகொடுப்பதை எதிர்த்துப் போராடி அடி வாங்கினர். மூடநம்பிகைகளைச் சாடிப் பேசினர். நாடகம் போட்டனர். நாடகம் எழுதினர். உரையாடினர். சமரிமைப் போராட்டம் நடத்தினர். ஒரு காலகட்ட மட்டக்களப்பின் தலைமுறை அது. தூரக் கிராமமான மண்டூரில் திராவிட முனேற்றக் கழகமே இருந்ததாம். அன்றைய அந்த இளைஞர்களுள் ஒருவரே நமது மாஸட்ர் சிவலிங்கம் என்பது பலரும் அறியாத ஒன்று. ஆம் அவர் ஆரம்பத்தில் ஓர் சூனாமானா பகுத்தறிவுவாதி அன்றே தமிழ் நாடு சென்று சிலகாலம் அங்கு கல்வி பயின்ற அவர் திராவிட முன்னேற்றக் கழக கருத்துக்காளால் ஈர்க்கப்பட்ட ஒரு சூனாமானாக் காரராக இருந்திருக்கிறார். அனைவரையும் சமமாக மதிக்கும் உயரிய பண்பு அவரிடம் மேலும் வளர இப்ப்குத்தறிவுச் சிந்தனைகள் மேலும் உதவின.

### இன்னொரு அனுபவம்

1956 1959 1960 களில் மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியின் முக்கிய செயற்பாட்டாளர்களுள் ஒருவராக அவர் செயற்பட்டார். ஊர்வலங்களில் மூவர்ணக் கொடி தாங்கி வந்த அவர் கோலம் ஞாபகம் வருகிறது. மட்டக்களப்புக் கச்சேரியை இயங்க விடாமல் பல மாதங்களாக நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஒரு போராளியுமானார், ஒரு மாத காலம் அப்போராட்டம்நடந்ததுகச்சேரியைஇயங்க அதனை முற்றுகையிட்டிருந்த சத்தியாக்கிரகப் போராளிகள் விடவில்லை. அவர்களுள் ஒருவராக மாஸ்டர் சிவலிங்கம்.

1960 களில் ஒரு இரவு நேரம் மட்டக்களப்புக் கோட்டையை வளைத்து அதனை இயங்கவிடாமல் இரவு பகல் படுத்து கிடந்த சத்தியாகிரகிகளுள் ஒருவராகக் கிடக்கிறார் நமது மாஸடர் சிவலிங்கம். இராணுவம் திடீரெனப் புகுந்து அங்கிருந்த அனைவரையும் அடித்து விரட்டுகிறது. சத்தியாக்கிரகிகள் இந்தத் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை அனைவருக்கும் அடிவிழுகிறது. அப்போது அந்த ஆமியால் அடிவாங்கியவர்களுள் ஒருவர் நமது சிவலிங்கம். அந்த அனுபவத்தைக்கூட ஒரு கூட்டத்தில் அவர் நகைசுவையாக இவ்விதம் பேசினார்

நடு இரவு ஆமி வந்தது தெரிந்து விட்டது நித்திரைகொள்வதுப்போலபாசாங்குசெய்தவாறு படுத்துக் கிடந்தேன் அருகில் வந்த ஆமியில் ஒருவன் துவக்கு முனையால் குத்தி எலும்புடா எலும்புடா என்று கூறினான். எனது எலும்புடல் இவனுக்கு எப்படித் தெர்ந்தது? உடலப் பார்த்து இது மனிதர் அல்ல எலும்பு எலும்பு எனப் பகிடி பண்னுகிறானோ? என எண்ணினேன். வாயைச் சும்மா வைத்திராமல் எலும்புதான் ஐயா என்றேன். பளாரென எனக்கு ஓர் அறை கிடைத்தது. வாயை மூடிக்கொண்டேன் என்று நகைச்சுவையாக கூட்டத்தில் விபரிப்பார் மாஸ்டர். எழும்புடா எனும் தமிழ்ச் சொல்லை தமிழ் தெரியாத ஒரு ஆமிக்காரன் எலும்பு என உச்சரித்த கதையை அவர் கூறிய முறை இது.

### இன்னொரு அனுபவம்


வில்லுப் பாட்டுக் கலைஞராக அவர் முகிழ்த்தது இன்னொரு கதை. அவர் குழுவில் முழக்கம் முருகப்பா மால ராமசந்திரன் செ. குணரட்ணம் ஆகிய இளைஞர்கள் இருந்ததாக ஞாபகம், மாஸட்ர் சிவலிங்கத்தின் வில்லுபாட்டு நடைபெறாத கோவில்களே இல்லை எனும் அளவிற்கு அன்றைய நிலை இருந்த்து. தந்தனத்தோம் என்றுசொல்லியே வில்லினில் பாட வில்லினில் பாட என அவர் வில்லுப்பாட்டை ஆரம்பிக்கும் அழகே ஒரு தனி அழகு மட்டக்களப்பில் வில்லுப்பாட்டை அறிமுகம் செய்த முதல்

தொடர்ச்சி 6ஆம் பக்கம்...

# சாரதி அரசியலை முஸ்லிம் தலைமைகள் பின்பற்றுமா?

## "ஐதேக சாரதியாக ரணில் இருக்கும் வரை அந்த பஸ்ஸில் முஸ்லிம்கள் ஏறக்கூடாது"

### மாமனிதர் அஷ்ரபின் தாரக மந்திரம்



முஸ்லிம் அரசியலில் ஏற்பட்டுவரும் அஷ்ரப்பின் தாரகமந்திரத்தின் தற்போதைய நிலை, முற்றாக வலுவிழக்கும் நிலைக்குச் செல்கிறதா? இல்லை தூக்கிப்பிடிப்பதால் தழைக்க முடியுமா என்ற தடுமாற்றத்தையே தோற்றுவித்து வருகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தலைவர் மர்ஹூம் அஷ்ரபின் அரசியல் மூலதனங்கள், முதலீடுகள் போன்று, இன்றுள்ள எந்த முஸ்லிம் தலைவராலும் அரசியலில் முதலீடு செய்ய முடியாதுள்ளது.

1994 முதல் 2000 ஆம் ஆண்டு வரைக்கும் அவரால் தூக்கிப்பிடிக்கப்பட்ட தாரக மந்திரம் இன்று 22 வருடங்களாகியும் முஸ்லிம் அரசியலில் எதிரொலிக்கிற தென்றால், அந்த தாற்பரியத்தின் கனதியை எங்களால் புரிந்துகொள்ள முடியும்,

**"ஐக்கிய தேசிய கட்சியின் சாரதியாக ரணில் விக்கிரமசிங்க இருக்கும் வரைக்கும் முஸ்லிம்கள் அந்த பஸ்வண்டியில் ஏறக்கூடாது".** இதுதான் அஷ்ரபின் விளம்பரம். இதைத்தாரக மந்திரமாக அஷ்ரப் அடிக்கடி மேடைகளில் முழங்கினார். கிழக்கில் இது கடுமையாக மூலதனமாக முதலிடப்பட்டது.அதிலும், கிழக்கின் எல்லைக் கிராமங்கள் ஒவ்வொன்றிலும் இந்த தாரக மந்திரம் உணர்ச்சிக் கோஷமாக விண்ணைப் பிளந்தது. புலிகளால், வேட்டையாடப்பட்ட முஸ்லிம் கிராமங்களில், கொழுத்த இலாபத்தைக் கொடுத்தது, இந்த அர சியல் முதலீடு.

இந்த உணர்ச்சியை இன்னுமொருபடி மேலோங்கச் செய்வதற்கு, அஷ்ரபின் அரசியல் வியூகம் அல்லது அந்தக் காலத்தில் அவருக்கிருந்த மவுசு சளைத்ததுமில்லை.

புலிகளால் கொல்லப்பட்ட முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகளின் பிள்ளை யை, மேடையில் நின்றவாறு தூக்கிப் பிடித்து, இக்குழந்தை அநாதையானது உங்களுக்கான போராட்டத்தில்தான் என்பார். தாக்கப்பட்ட பள்ளிவாசல்கள் அல்லது கிராமங்களைக் காட்டி, ரணிலின் ஐக்கிய தேசிய கட்சி அர சாங்கம் புலிகளுக்கு வழங்கிய ஆயுதங்களால் தான், இவை அழிக்கப்பட்டன என்பார். இவற்றுக்கெல்லாம் மேலாக, வடக்கி லி ருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லி ம்களின் அகதி முகாம்களுக்குள், சென்று இந்நிலை மைக்கு அடித்தளமிட்டது ஐக்கிய தேசிய கட்சிதான் என்பார். அதிகாரத்தின் உச்சத் திலிருந்த அஷ்ரப், புனர்வாழ்வுக் கொடுப் பனவுகள் அல்லது வேலை வாய்ப்புக்களை வழங்கி விட்டு நடாத்தப்படும் பொதுக்கூ ட்டங்களிலே, இந்த தாரக மந்திரமான சாரதி கோஷத்தை தூக்கிப்பிடிப்பதுண்டு. கிழக்கில், முப்பது வருடங்களாக ஐக்கிய தேசிய கட்சியின் மோகத்தில் இருந்த முஸ்லிம்களை, நிதானம் கலைக்க இந்த மந்திரத்தை தவிர வேறு வியூகம் அவருக்கு இருக்கவில்லை.

இன்னும், ஐக்கிய தேசிய கட்சியின் அன்றைய முஸ்லிம் பிரதிநிதிகள் எதற்கும் லாயக்கற்றவர்கள் என்பதை காட்டும் மறைமுக அளவீடும் இந்த தாரக மந்திரத் துக்குள் ஒழிந்திருந்தது.

இதைவிட, இன்னொரு விடயமும் அஷ்ரப்பை ஆத்திரமூட்டியிருக்கலாம். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தவிசாளரான ஷேகுஇஸ்ஸடீனுக்கு தேசியப் பட்டியலொன்றை வழங்க ரணில் எடுத்த முடிவுதானது. ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சியை ஸ்தாபித்து, ஷேகுஇஸ்ஸடீனால் முன்னெ டுக்கப்பட்ட பிரச்சாரங்கள் அந்தக் காலத்தில் அஷ்ரப்புக்கு தலையிடியாகத்தான் இருந்தது.

இதையுணர்ந்த ரணில் விக்கிரமசிங்க, ஷேகு இஸ்ஸடீனுக்கு தேசியப் பட்டி யலையும் வழங்கியே இருந்தார். இந்தப் பின்புலங்களே, இந்த தாரக மந்திரத்தை தோற்றுவித்திருந்தன. இது, இன்றளவும் முஸ்லிம் அரசியலில் சிலாகிக்கப்படுகிறது. ஒருவகையில், அஷ்ரப்பின் ஆளுமைக்கு இதுவொரு அடையாளம்தான்.

இன்று, இப்படியொரு அரசியல் ஆளுமை முஸ்லிம் அரசியல் பரப்பில் இருப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறு இருந்தாலும், இதற்கான அங்கீகாரங்களை போட்டி அரசியல் போர்த்திவிடுவதாகவே தென்படுகிறது. அஷ்ரப் முன்னெடுத்த தாரக மந்திர முழக்கம் அவரது மரண காலத்திலேயே மலினப் படுத்தப்பட்டதான ஒரு பார்வையும் இருக்கவே செய்கிறது.

2001 முதல் 2004 வரையான ரணிலின் ஆட்சியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இரண்டாவது தலைமை இரண்டறக்கலந் திருந்தது. இது, தெற்குத் தலைமை, கிழக்குத் தலைமை என்று பிரதேச வாத சிந்தனைகளுக்கு வித்திட்டதுதான் இச்சமூகத்துக்கான சோக வரலாறு. இதிலுள்ள யதார்த்தங்கள் அன்றே புரிய வைக்கப்பட்டிருந்தால், முஸ்லிம் அரசியலில் போட்டிச் சிந்தனைகள் ஏற்பட்டிருக்காதெனலாம். அஷ்ரப்பின் தாரக மந்திரத்திலுள்ள தாற்பரியங்களைப் புரியவைப்பதில், கட்சியின் தலைமையைப் பாரமேற்ற தரப்பு, வெற்றியடையவில்லை என்ற கணிப்பீட்டிற்கே வரவேண்டியுள்ளது.

அந்தக் காலப் பகுதியிலும், விடுதலைப் புலிகளின் போக்குகள் முஸ்லிம் சமூகத்து க்கு உடந்தையாக இருக்கவுமில்லை. இதனால், அஷ்ரப்பின் **"ரணில் சாரதியாக இருக்கும்வரை முஸ்லிம்கள் அந்த பஸ்ஸில் ஏறக்கூடாது"** என்ற ஆணை மவுசி முக்காமலே இருந்தது. இதன் பின்னர், 2015 முதல் 2019 வரை, ரணிலைப் பிரதமராக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாத்திரமல்ல அகில இலங்கை மக்கள் காங்கிரஸூம் அயராது உழைத்து, அமைச்சுக்களைப் பெற்றுக்கொண்டன.

எதையுமே, புதிய அரசியல் கருத் தாக முன்வைக்க முடியாதுள்ள முஸ்லிம் தலைமைகள், அஷ்ரப்பின் அடியொற்றிக ளெனக் காட்டியவாறு கட்சியை நிலைப் படுத்த இயலாத நிலையில் இருப்பதும் அவதானத்துக்குட்பட்டது தான். காரணம், காலம்கடந்த தாரக மந்திரமாகியுள்ளதுதான். புலிகளே இல்லாத நிலையில், ரணிலோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியோ ஆயுதங் கள் வழங்கியமை அல்லது அழித்தமை பற்றிப்பேசி முஸ்லிம் சமூகத்தை உசுப்பேற்ற முடியாதே! இதனால், இன்றைய சூழ்நிலையில் எதையும் சூடாக்கலாம் என்ற நிலையே இருக்கிறது.

அதலபாதாளத்துக்குச் சென்றுள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்கான அரசாங்கமிது. ரணில் விக்கிரமசி ங்கவை எதிர்ப்பது, நாட்டில் பஞ்ச த்தை உருவாக்கும் என்ற தொனிகளே இப்போது தலையெடுக்கின்றன. இது எதுவரைக்கும் தெரியுமா? அழைப்புக்கள் வரும்வரைக்குமே என்ற நிலைப்பாட்டில் எந்தக் கட்சியும் இருக்கவே கூடாது.


அடியோடு பிடிக்காத ராஜபக்ஷக்களை விரட்டும் வியூகங்களும் இன்று வெற்றி யளிக்கப் போவதில்லை. ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் ஆதிக்கம் இருப்பதற்கான அடையாளம்தான் அஜித் ராஜபக்ஷவின் தெரிவாக இருக்கிறது.

எனவே, எல்லோருக்கும் பொதுவான பொருளாதாரப் பிரச்சினைக்குத்தீர்வுகாணும் வகையிலான வியூகங்களிலே முடிவுகளை எடுக்க வேண்டும்.

---

5ஆம் பக்க தொடர்ச்சி...

## மாஸ்டர் சிவலிங்கம்



ஆள் அவர் என நினைக்கிறேன். அவர் வானொலி மாமா ஆகியமை இன்னொரு கதை. சிந்தாமணியில் சிறுவர் கதைகள் எழுதியமை இன்னொருகதை. நல்லகருத்து களைக்கூற நகைச்சுவையை நாடகத்தை வில்லுப்பாட்டை ஊடகமாக் கொண்ட அவர் இந்த கருத்துகளை சிறுவர்களுக்கு விதைப்பதே தனது தலையாய பணியாக கண்டிருக்க வேண்டும். அதன் விளைவே அவர் கதை சொல்லும் மாமாவான கதை. தனது நாடக நடிப்பு. குரல் வளம் உடல் அசைவு கற்பனை அனைத்தும் இணைத்து அவர் குழந்தைகளுக்கு கதைசொல்வார்.

அவருக்கு ஒரு புத்தகம் மாத்திரம் போதும் அதில் விரல்களால் தட்டி குதிரை ஓட் டத்தைக் காட்டுவார். அவரது சொல்லும் ஒலியும் இணைந்து கதைக்கு ஓர் அழகு கொடுக்கும். குரலைப் பயன் படுத்திக் குயிலாகக் கூவுவார். நாயாகக் குரைப்பார். மாடாகக் கத்துவார். குழ்ந்தைகள் மெய் மறந்து அவர் கதை கேட்பர். எனது மனைவி சித்திரலேகா குழந்தையாக அவரிடம் தான் கதைகேட்ட காலத்தை என்னிடம் கூறியிருக்கிறார்.

அவர்களது வீட்டுக்கே வந்து அவர் கதைகூறியிருக்கிறார்.

எனது மனைவியார் தனது அனுபவத்தை என்னிடம் இவ்வாறு கூறினார்: "சிவலிங்கம் மாமா வருகிறார்" என்றால் எங்களுக்கு ஆனந்தம். அவரது வரவுக்காகக் காத்திருப்போம். எமது வீட்டிலிருந்த மரக் கதிரையின் கைப்பிடியினைத் தளமாகக் கொண்டு குதிரைகளின் விரைவான குளம்பொலியினை ஒலியெழுப்பும் அவரது விரல்கள் எமக்கு அம்புலிமாமா சஞ்சிகையின் கதைகளில் விரைந்தோடுகின்ற குதிரை வீரர்களையும் அக்குதிரைகளின் குளம்பொலியையும் ஞாபகப்படுத்தும்"

பின்னாளில் மாநகரசபை அவரை தன் கீழிருந்த நூல் நிலையம் தோறும் சென்று குழந்தைகளுக்கு கதை சொல்லும் மாமாவாக அமர்த்திகொண்டது. பின்னாளில் அவர் சமய பக்தரானார். சமய சொற்பொழிவுகளுமாற்றினார். சினிமா உலகில் வடிவேலுவைக் கண்டாலே ஒரு கல கலப்பு கேட்பதுபோல மட்டக்களப்புப் பாடசாலை களில் மாஸ்டர் சிவலிங்கம் சென்றாலே ஒரு கலகலப்பு உருவாகிவிடும். மாமா என் மாணவர் அவரை வாய் நிறைய அழைக்கவுமாயினர்.

1960 களின் நடுப்பகுதியில் திரவியம் இராமசந்திரன் நான் மாஸ்டர் சிவலிங்கம் ஆகியோர் இணைந்து வின்சன்ட் மகளிர் கல்லூ ரியில் சில கூத்துகள் பழக்கியுமுள்ளோம். கூத்து ஆடல் பாடல் களை சிறு வயதிலி ருந்தே கேட்டு வளர்ந்த ஓர் கூத்துக் கலைஞரும் அவர். 950 களில் தமிழ் நாடு சென்ற அவர் கார்ட்டூன் சித்திரம் வரையும் அக்கலையைச் சாமாஎனும் காட்டூனிஸ்ட் இடம் பயின்றார் என அறிகிறோம். அக்கால ஆனந்த விகடனை சாமாவின் நகைச்சுவைக் கார்ட்டூன்கள் நிறைத்து கொண்டிருக்கும்.

இவ்வண்ணம் மிமிக்கிறி கலைஞனாக, நகைச்சுவைப் பேச்சாளனாக பகுத்தறிவு வாதியாக, அரசியல் செயற்பாட்டாளனாக, சத்தியாக்கிரகியாக, நாடக நடிகனாக, கூத்துக் கலைஞனாக, வில்லுப் பாட்டுக் கலைஞனாக, சிறுவர்கட்கான எழுத்தாள னாக, கதைசொல்லியாக, கார்ட் டூனிஸ்டாகப் பன்முகம் காட்டியவர் மாஸ்டர் சிவலிங்கம். அவரது இழப்பு துயரத்திற்குரியதன்று.

அவர்வாழ்வு கொண்டாட்டத்திற்குரியது. அவர் வாழ்வைக் கொண்டாடுவோம். அக்கொண்டாட்டம் பல மட்டங்களில் நிகழட்டும்.



# நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் உயிரை பணயம் வைத்து சவால்களை எதிர்கொள்வேன்

## அழுத்திச் சொல்கிறார் புதிய பிரதமர்

**உயிரை பணயம் வைத்து இந்த சவாலுக்கு நான் முகம் கொடுப்பேன். அந்த சவாலை வெற்றி கொள்வேன். அதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பையும் எனக்கு பெற்றுத் தாருங்கள்.**

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின்போது தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது, கடந்த வியாழக் கிழமை (12) நான் பிரதமர் பதவியை பொறுப் பேற்றேன். அந்தப் பதவியை நான் கேட்க வில்லை. நாட்டில் ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலையை கருத்தில் கொண்டு இந்தப் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி எனக்கு அழைப்பு விடுத்தார். நான் அரசியல் தலைவராக மட்டுமின்றி இலவசக் கல்வியை அனுபவித்து கொழும்பு சட்டக் கல்லூரியில் சட்டத்துறையில் பட்டம் பெற்று உயர்ந்த தேசியத் தலைவர் என்ற வகையிலே இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கையின் பொரு ளாதாரம் மிகவும் மோசமான நிலையிலேயே உள்ளது. 2022 ஆரம்பத்தில் கடந்த அரசாங்கத் தின் வரவுசெலவு திட்டத்தில் 2.3 ட்ரில்லியன் ரூபாய்கள் வருமானமாக உள்ளன என காட்டப்பட்டாலும் இந்த வருடத்திற்கான உண்மையான வருமான எதிர்வு கூறல் 1.6 ட்ரில்லியன் ரூபாய்களாகவே உள்ளன..

2022 ஆம் ஆண்டிற்கான அரசின் செலவு 3.3 ட்ரில்லியன் ரூபாய்கள். எவ்வாறாயினும் கடந்த அரசில் வட்டி விகிதம் அதிகரித்தமை மற்றும் மேலதிக செலவுகள் காரணமாக 2022 ஆம் ஆண்டிற்கான அரசின் மொத்த செலவு 4 ட்ரில்லியன் ரூபாய்களாகும். வருடத்திற்கான வரவுசெலவு பற்றாக்குறை 2.4 ட்ரில்லியன் ரூபாய்களாக உள்ள அதேவேளை அது சராசரி தேசிய உற்பத்தியில் நூற்றுக்கு 13 வீதமாகும் .

அதேப் போன்று அங்கீகரிக்கப்பட்ட கடன் எல்லை 3200 பில்லியன் ரூபாயாகும். நாம் மே மாதத்தின் இரண்டாம் வாரம் ஆகும்போது 1950 மில்லியன் ரூபாய்களை செலவு செய்திருந்தோம். அதன்படி அண்ணளவான மிகுதி 1250 மில்லியன் ரூபாய்கள். நாம் நேற்று அமைச்சரவையில் திறைசேரி முறிகளை வழங்கும் அனுமதிக்கப்பட்ட எல்லையை 3000 பில்லியனில் இருந்து 4000 பில்லியன் வரை அதிகரிக்கும் யோசனை ஒன்றை பாராளுமன்றத்தில் முன்வைக்க ஒரு தீர்மானத்தை எடுத்தோம்.

2019 நவம்பர் மாதத்தில் எமது அந்நியச் செலாவணி கையிருப்பு 7.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இருந்தன. ஆனால் இன்று திறைசேரியால் ஒரு மில்லியன் டொலர்களைக்கூட தேடிக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எரிவாயுவை கப்பலில் ஏற்றும் பொருட்டு செலுத்தத் தேவையான 5 மில்லியன் அமெரிக்க டொலர்களைக்கூட இந்த நேரத்தில் நிதியமைச்சினால் தேடிக் கொடுக்க முடியாதுள்ளது.

இவ்வனைத்து நெருக்கடிகளுக்கு மத்தியில் நாம் முகம் கொடுக்கும் மிகமோசமான சில சிக்கல்கள் உள்ளன. எதிர்வரும் சிலநாட்களில் வரிசைகளை கட்டுப்படுத்தும் பொருட்டு மிகவிரைவில் சுமார் 75 மில்லியன் அமெரிக்க டொலர்களை தேடவேண்டிய உள்ளது. இப்போது நமது கையிருப்பில் ஒரு நாளைக்குத் தேவையான பெற்றோல் மட்டுமே உள்ளது. நேற்று வந்த டீசல் கப்பலால் இன்றில் இருந்து உங்களின் டீசல் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு கிடைக்கும். இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் மே 19 மற்றும் ஜூன் 01 ஆகிய திகதிகளில் மேலும் இரண்டு டீசல் கப்பல்களும் மே 18 மற்றும் மே 29 இரண்டு பெற்றோல் கப்பல்கள் வரவுள்ளன. இன்றுவரை 40 நாட்களுக்கு மேலாக இலங்கையின் கடற்பரப்பில் பெற்றோல், மசகெண்ணெய், எண்ணெய் ஏற்றிவந்த கப்பல்கள் 3 நிறுத்தி வைக்கப்பட் டுள்ளன. அவற்றுக்கு செலுத்தும் பொருட்டு திறந்த சந்தையில் டொலர்களை பெற்றுக் கொள்ள நடவடிகை எடுக்கப்படும்.

மின்சாரத் தேவையில் நான்கில் ஒன்றை உற்பத்தி செய்ய எரிபொருளே பயன்படுத்தப்படுகிறது. இதனால் நாளாந்த மின்வெட்டு இன்னும் சில நாட்களில் 15 மணித்தியாலங்களாக மாறவும் இடமுண்டு. ஆனால் நாம் இதற்கு தேவையான நிதியை தேடிக்கொண்டுள்ளோம் . அதேப் போன்று முடிந்தளவு நுகர்வோருக்கு எரிவாயுவை பெற்றுக் கொடுக்கும் பொருட்டு 20 மில்லியன் அமெரிக்க டொலர்களை கூடிய விரைவில் தேடவேண்டும். மண்ணெண்ணெய் மற்றும் சம்பந்தமான நிலைமை இதனை விடப் பயங்கரமானது. இந்த நேரம் வரை இலங்கை மத்திய வங்கி, அரச வங்கிகள், தனியார் வங்கிகள், இலங்கையில் உள்ள வெளிநாட்டு வங்கிகள் அனைத்தும் டொலர் இல்லாத சிக்கலுக்கு முகம் கொடுத்துள்ளன. நம்மிடம் கையிருப்பில் உள்ள டொலர்களின் அளவு மிகவும் சிறியது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் இவ்வனைத்து சி ரமங்களுக்கு மத்தியில் நேற்று ஒரு டீசல் ஏற்றிய கப்பலை நேற்று கொண்டு வந்தோம். அதனால் இன்று முதல் அந்த டீசலை உங்களால் பெற்றுக்கொள்ள முடியும். அதன்பொருட்டு இந்தியாவின் ஒத்துழைப்பு நமக்கு கிடைத்தது. அதேப் போன்று வந்துள்ள எரிவாயு கப்பலுக்கான கட்டணத்தை செவ் வாய்க்கிழமைக்கு முன்னர் செலுத்த நாம் நடவடிக்கை எடுப்போம். அதன் மூலம் உங்களின் எரிவாயு பிரச்சனைகளுக்கு ஏதோவொரு தீர்வு கிடைக்கும்.

இதற்கு இடையில், மற்றுமொரு உதாரணம் மருத்துவ மருந்துகளுக்கானத் தட்டுப்பாடு. இருதய நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகள், சத்திர சிகிச்சைக்குத் தேவையான சிகிச்சை உபகரணங்கள் உட்பட பல மருத்துவ மருந்து வகைகளுக்கான தட் டுப்பாடு நிலவுகிறது. மருத்துவ மருந்துகள், சத்திர சிகிச்சை உபகரணங்கள் மற்றும் தேவையான உணவுகளை வழங்கும் வழங்குநர்களுக்கு 04 மாதங்களாக கட்டணம் செலுத்தப்படவில்லை. அவர்களுக்கு வழங்கவேண்டிய நிலுவை தொகை 34 பில்லியன் ரூபாய்களாகும். அதேப் போன்று அரச ஔடதக் கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்த மருத்துவ மருந்துகளுக்கு 04 மாதங்களாக கட்டணம் செலுத்தப்படவில்லை. அதனால் அவர்களை கருப்புப் பட்டியலில் சேர்க்க வெளிநாட்டு மருத்துவ நிறுவனங்கள் நடவடி க்கை எடுத்து வருகின்றன. 14 அத்தியாவசிய மருத்துவ மருந்துகள் தட்டுப்பாடாக உள்ளமையும், அதில் இரண்டையாவது வழங்க இந்த நேரத்தில் எமது மருத்துவ வழங்கள் பிரிவிற்கு இயலாது உள்ளமை மிகவும் வருந்தத்தக்க விடயமாக உள்ளது. இருதய நோய்களுக்கு பயன்படுத்தப்படும் மருந்து, மற்றும் விசர் நாய்க்கடி எதிர்ப்பு மருந்து ஆகியவையே அந்த இரண்டு மருந்துகளாகும். ஆனால் விசர் நாய்க்கடி எதிர்ப்பு மருந்திற்க்கு மாற்று மருந்து எதுவும் இல்லை.

இதற்கிடையில் 2022 ஆண்டிற்காக முன்வைக்கப்பட்ட அபிவிருத்தி வரவுசெலவு திட்டத்திற்கு பதிலாக புதிய வரவுசெலவு திட்டமொன்றை முன்வைக்க திட்டமிடப்பட் டுள்ளது. அதனை சலுகை வரவுசெலவு திட் டமாக முன்வைக்கவே நான் திட்டமிடுகிறேன்.

அதேபோல், இதுவரை நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கன் விமான சே வையை தனியார் மயப்படுத்துமாறு நான் முன்மொழிகின்றேன் . 2020 – 2021 ல் மட்டும் ஸ்ரீலங்கன் விமான சேவை 45 பில்லியன் ரூபாய்கள் நட்டமடைந்துள்ளது .2021 மார்ச் 31 ஆகும் போது இதன் மொத்த நட்டம் 372 பில்லியன்களாக இருந்தது. நாம் இதனை தனியார் மயப்படுத்தினாலும் இந்த நட்டத்தை நாமே ஏற்க நேரிடும். இந்த நட்டத்தை வாழ்கையில் ஒருமுறையாவது விமானத்தில் பயணிக்காத இந்த நாட்டின் ஏழை எளிய மக்களும் அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

குறுகிய காலத்திற்கு நாம் இதனை விட மோசமான காலத்திற்கு முகம் கொடுக்க ப் போகின்றோம். பணவீக்கம் மேலும் அதிகரிக்க இடமுள்ளது.

அரசாங்கம் தற்போது 92 பெற்றோல் லீட்டர் ஒன்றில் ரூ. 84.38, 95 பெற்றோல் லீட்டர் ஒன்றில் ரூ. 71.19, டீசல் லீட்டர் ஒன்றில்ரூ. 131.55 சுப்பன் டீசல் லீட்டர் ஒன்றில் ரூ. 136.31 மற்றும் மண்ணெண்ணெய் லீட்டர் ஒன்றில் ரூ. 294.50 என நட்டமடைகின்றது . பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இந்த நட்டத்தை மேலும் தாங்கிக் கொள்ள முடியாது. அதேப்போல இலங்கை மின்ச ாரசபை மின் அலகு ஒன்றிற்காக உங்களிடம் ரூ. 17 ஐ அறவிட்டாலும் அதன் பொருட்டு 48 ரூபாய்கள் வரை செலவு செய்கிறது . அதன்படி ஒரு அலகிற்கு 30 ரூபாய்கள் நட்டம் ஏற்படுகிறது. அதுவும் மோசமான சிக்கலாகும்.

நான் இந்த நேரத்தில் விருப்பப்படா விட்டாலும் பணத்தை அச்சடிப்பதற்கு அனுமதி வழங்க நேரிடும். அரச ஊழியர்களின் இந்த மாத சம்பளத்தை வழங்கவும், உங்களுக்கு தேவையான பொருட்கள் சேவைகளின் பொருட்டே அதனை செய்யவுள்ளது. எவ்வாறாயினும் பணத்தை அச்சடிப்பதால் ரூபாவின் பெறுமதி குறையும் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். தற்போதைய நிலையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் மின்சாரசபைக்குத் தேவையான நிதியைக்கூட தேடமுடியாது ள்ளது. எவ்வாறாயினும் எதிர்வரும் சில மாதங்களுக்கு நீங்களும் நானும் வாழ்க்கையில் மோசமான காலக்கட்டத்தை கடக்க நேரிடும். அதற்கு நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் முகம் கொடுக்க வேண்டும்.

நான் மக்களுக்கு விடயங்களை மறைத்து பொய் சொல்வதற்கு எந்தவகையிலும் விரும் பவில்லை. பயங்கரமாக இருந்தாலும் அசிங்க மாக இருந்தாலும் இதுதான் உண்மையான நிலைமை. குறுகிய காலத்திற்கு நாம் கடந்த காலத்தைவிட மிகவும் கஸ்டமான காலத்திற்கு முகம் கொடுக்க போகின்றோம். இந்த நேரத் தில் நமக்கு கவலைப்பட மட்டுமே முடியும். ஆனால் இது குறுகிய காலத்திற்கு மட்டுமே. எதிர்வரும் சில மாதங்களில் எமது நட்பு நாடு களின் உதவிகள் மற்றும் ஒத்துழைப்பு எமக்கு கிடைக்கும். அவர்கள் எமக்கு உதவி செய்வ தாக உறுதியளித்துள்ளனர். அதன் பொருட்டு எதிர்வரும்சிலமாதங்கள்நாம்பொறுமையுடன் இருக்க வேண்டும். ஆனால் இதில் இருந்து நாம் மீள முடியும். அதன்பொருட்டு நாம் புதிய வழிக்கு செல்ல நேரிடும்.

இந்த சந்தர்ப்பத்தில் தற்போதைய நிலைமை சம்பந்தமாக கட்சித் தலைவர்களுக்கு அனுப் பிய கடிதங்களுக்கு பதிலளித்தமை குறித்து அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

தற்போது நிலவும் இந்த சிக்கல்களுக்கு தீர்வு காணும் பொருட்டு தேசிய சபை அல்லது அரசியல் சபை ஒன்றை உடனடியாக அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டி உள்ளது.

அதன் மூலம் அனைத்து தரப்பினருடனும் கலந்தாலோசித்து எட்டப்படும் தீர்மானத் திற்கு அமைய நிச்சயிக்கப்பட்ட காலப்பகு திக்குள் பொதுவான குறுகிய கால- மத்தியக் கால – மற்றும் நீண்ட கால செயற்திட் டங்களை நடைமுறைப்படுத்தி நாட்டை மீண்டும் உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்ல எம்மால் முடியும். மண்ணெண்ணெய், எரிவாயு, எரிபொருள் வரிசை இல்லாத நாடு, மின்சாரம் துண்டிக்கப்படாத நாடு, விவச ாயத்தை சுதந்திரமாக மேற்கொள்ளக் கூடிய வசதிகள் உள்ள நாடு, இளைஞர் யுவதிகளின் நாளையதினம் பாதுகாக்கப்பட்ட நாடு, மனித வளம் போராட்டக் களத்தில் மற்றும் வரிசையில் வீணடிக்கத் தேவை இல்லாத நாடு, எல்லோரும் சுதந்திரமாக வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்லக் கூடிய நாடு, மற்றும் மூன்று வேளையும் உணவு உண்ணக் கூடிய நாட்டை நாம் கட்டியெழுப்புவோம்.

“நான் பொறுப்பேற்றது மிகவும் அபாயகர மான சவால். கத்தியின் மேல் நடப்பதைவிட இது பயங்கரமான சவால் மிகுந்தது. மிகவும் ஆழமானது. அடியே தெரியவில்லை. பாலங் கள் மெல்லிய கண்ணாடியால் அமைக்கப்பட் டுள்ளன. கைப்பிடி இல்லை. என்னுடைய கால்களில் கலற்ற முடியாத பாதணிகள் போடப் பட்டுள்ளன. அதன் அடியில் கூர்மையான இரும்பு ஆணிகள் பொருத்தப்பட்டுள்ளன. குழந்தையை பாதுகாப்பாக அடுத்த பக்கம் கொண்டு செல்ல வேண்டி உள்ளது. இந்த சவாலை நான் நாட்டிற்காகவே பொறுப் பேற்றேன். எனது நோக்கமும் அர்ப்பணிப்பும் ஒரு தனிமனிதன், ஒரு குடும்பம், அல்லது ஒரு கூட்டத்தை பாதுகாப்பது அல்ல. முழு நாட்டின தும் மக்களை காப்பாற்றுதே, இளைஞர்களின் எதிர்காலத்தை காப்பாற்றுவதே. உயிரை பணயம் வைத்து இந்த சவாலுக்கு நான் முகம் கொடுப்பேன். அந்த சவாலை வெற்றி கொள்வேன். அதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பையும் எனக்கு பெற்றுத் தாருங்கள்.

நான் எனது கடமையை நாட்டிற்காக செய்து முடிப்பேன். அது நான் உங்களுக்கு அளிக்கும் உறுதியாகும்’’. – என்றார் பிரதமர் .

கட்டப்பன்

# கூட்டமைப்பின் தயவில் கல்முனையில் தமிழருக்கு எதிரான அறுவைச் சிகிச்சை!

இலங்கை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு எவ்வாறு எப்போது தீர்வு கிட்டுமென உலக நாடுகள் உற்றுநோக்கிக் கொண்டிருக்கின்றன. மக்களும் பெரும் எதிர்பார்ப்புடன் காத்து இருக்கின்றனர்.

இன்றளவும் அத்தியாவசிய பொருட்களின் கேள்விகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே காணப்படுகின்றது. அரச தலைவர்கள் தங்களது பதவிகளை விட்டு வெளியேறக்கோரி இன்றுவரை போராட்டங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

இவ்வாறான இறுக்கமான சூழ்நிலையிலும் மே 18 தமிழர்களால் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. இம்முறை அரசுக்கு எதிரான போராட்டங்களில் ஒன்றுபட்ட சிங்கள, முஸ்லிம் சகோதரர்களும் மே 18 ஐ தமிழர்கள் தாங்கள் இழந்த உறவுகளின் பெயரால் அனுஷ்டிக்க ஆதரவை வழங்கியதுடன், "கோட்டா கோ கம" போராட்டங்கள் மூலம் கோட்டா அரசு சிங்கள மக்கள் மீது மேற்கொண்ட அடக்குமுறைகள் மூலம் 2009இல் தமிழர்கள்மீது எவ்வாறான அத்துமீறல்கள் நடத்தப்பட்டிருக்குமென்பதை உணர்ந்தவர்களாக சிங்கள இளையோர் சிலரும் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டுமிருந்தனர்.

கடந்த சில மாதங்களாக மக்களின் ஒட்டுமொத்த பார்வையும் நாடு எதிர்கொண்டுள்ள இக்கட்டான நிலைபற்றி சிந்திக்கையில் ஒவ்வொரு அத்தியாவசியப் பொருட்களுக்கும் நிரையில் நிற்கவே நேரம் சரியாகும் சூழ்நிலையிலும் கூட "ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு" என்பது போல் கல்முனையில் தமிழர்கள் மீது முஸ்லிம் அரசியல்வாதிகளது கைங்கரியங்கள் நிறைவேற்றப்பட்ட வண்ணமே இருக்கின்றன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு மூலம் தமிழர்கள் சிங்கள ஆட்சியாளர்களின் பரம விரோதிகளென்ற தோற்றத்தை வலுப்படுத்தி, எந்த ஆட்சி வந்தாலும் அவர்களுடன் ஒட்டுண்ணி அரசியல் நடத்தி தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை அபகரிப்பது தொடக்கம் நியாயமான கோரிக்கைகளை மழுங்கடிக்கச் செய்வது வரை தமது தமிழர்களுக்கு எதிரான கைங்கரியங்களை கச்சிதமே அரங்கேற்றி வருகின்றனர்.

இவ்வாறான சூழ் நிலையிலும்கூட பாராளுமன்றஉறுப்பினர்களானஎம்.ஏ.சுமந்திரன் மற்றும் இரா.சாணக்கியன் ஆகியோர் அண்மையில் கல்முனையில் இடம்பெற்ற முஸ்லிம் அரசியல் தலைவர்கள் சிலரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "கோட்டா கோ" ஆர்ப்பாட்டங்களில் சில உள்ளூர் கூட்டமைப்பு முக்கியஸ்தர்களுடன் கலந்து கொண்டமையானது இன்னும் கல்முனை தமிழர்களை அரச இயந்திரத்திலிருந்து தூரவிலக்கும் செயற்பாடாகவே பார்க்கப்பட வேண்டியுள்ளது. இதன் மூலம் தமிழர்கள் கல்முனையில் 'கோட்டா அரசை' எதிர்க்கின்றனர் என்ற செய்தி முஸ்லிம் அரசியல் தலைவர்களாலேயே கொழும்பு வரை கொண்டு சேர்க்கப்படும் என்பதை சுமந்திரன், சாணக்கியன் அறியாமல் இருக்கலாம். ஆனால் கல்முனை தமிழர்கள் நன்கறிவார்கள்.

உண்மையில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் கல்முனை தொடர்பில் கொண்டுள்ள நிலைப்பாடு தொடர்பில் கூட்டமைப்பினருக்கும் முஸ்லிம் தரப்பினருக்குமிடையில் வெளிப்படைத் தன்மை வேண்டும். குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்தரன், சாணக்கியன் ஆகியோர் தங்களது முஸ்லிம்கள்சார் நடவடிக்கைகள் கல்முனையில் தமிழர்களுக்கெதிரான முஸ்லிம்களின் அறுவைச் சிகிச்சைகளில் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது என்பது தொடர்பில் தெளிவடைதல் வேண்டும். தமது மேற்கத்திய பாணியிலான அரசியல் ஹரீஸ் போன்ற விபச்சாரப் பாணியிலான அரசியல்வாதிகளின் தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு எவ்வாறு துணைபோகின்றது என்பதில் தெளிவுகாண வேண்டும்.

கல்முனையில் இடம்பெற்ற "கோட்டா கோ" ஆர்ப்பாட்டத்திற்கு முன்னதாக கல்முனை மாநகர சபைக்கு ஆணையாளராக நியமிக்கப்பட்டிருந்த இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர் என்.சிவலிங்கம் தமிழர் என்ற ஒரே காரணத்தால் முதல்வர் சட்டத்தரணி ஏ.எம்.ரக்கீப் இனால் கடமையேற்புக்கு தடைகள் ஏற்படுத்தப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டார்.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர் கல்முனை மேலதிக மாவட்ட பதிவாளர் காரியாலயம் மற்றும் காணி பதிவகத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான கரும பீடம் மூடப்பட்டு அது கல்முனை பிரதேச செயலகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

## SLAS அதிகாரி சிவலிங்கம் தடுக்கப்பட்டது ஏன்?

இந்த விடயங்கள் தொடர்பில் முஸ்லிம்களுக்கு பூஸ்டராக செயற்படும் சாணக்கியனோ அல்லது சுமந்திரனோ பாராளுமன்றத்தில் வாய்மூடி மௌனியானதன் மர்மம் என்னவென புரியவில்லை. இவர்களது இவ்வாறான செயற்பாடுகள் மிகவும் அடிமட்டத்தில் இருக்கின்ற கூட்டமைப்பின் ஆதரவை அதள பாதாளத்திற்கே கொண்டு செல்லும் என்பதை எதிர்வரும் தேர்தல்கள் உணர்த்தும்.

கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் நல்லாட்சி அரசாங்கத்தில் வடக்கு பிரதேச செயலக விடயத்தில் த.தே.கூட்டமைப்பு கல்முனையில் விதைத்த விதையின் அறுவடையை கடந்த பொதுத் தேர்தலில் அம்பாரையில் அறுவடை செய்ததை அவர்கள் மறந்திருக்கமாட்டார்கள். தேர்தலின் போது அளிக்கப்பட்ட வாக்குகளில் 30,000 க்கும் மேலான வாக்குகள் த.தே.கூவுக்கு எதிராகவே அளிக்கப்பட்டிருந்தன. அளிக்கப்பட்ட வாக்குகளில் 50% க்கு மேலானவர்கள் த.தே.கூ வின் மீதிருந்த அதிர்ப்த்தியை வாக்களிப்பின் மூலம் வெளிப்படுத்தியிருந்தவர்கள். தமிழ் தேசிய கூட்டமைப்பு பெற்ற 25,000 வாக்குகள்கூட வேட்பாளர்களின் தனிப்பட்ட செல்வாக்கு மற்றும் பகீரதப்பிரயத்தனத்தினால் பெறப்பட்டதேயன்றி கட்சியின் செல்வாக்கை குறிப்பிட்டு கூறமுடியாத நிலையே இருந்தது. இவை யாவும் கல்முனை தமிழர்கள் தொடர்பில் த.தே.கூ பாராமுகமாக நடந்துகொண்டது மட்டுமன்றி தமிழர்கள் மீது சகல விதத்திலும் தங்களது அழுத்தங்களை பிரயோகித்து அடக்கி ஒடுக்க நினைக்கும் முஸ்லிம் காங்கிரசுடனான ஊடல் அரசியல் காரணமாகவும் என்பது அனைவரும் அறிவர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் ஒரு உப அலுவலகமாக இருக்கலாம். அதன் மூலம் அங்கு பிரதேச செயலாளராக நியமனம் பெறும் இலங்கை நிருவாக சேவை அதிகாரி, உப அதிகாரியாக செயற்படலாம். அதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றது. ஆனாலும், நிர்வாக ரீதியல் தனியான பிரதேச செயலகமாக 29 கிராம சேவையாளர் பிரிவுகளுடன்நிருவாகம், திட்டமிடல், சமூக சேவை, கிராம அபிவிருத்தி, விளையாட்டு, இளைஞர் சேவை, மகளிர் பிரிவு, காணி, மோட்டார் வாகன பிரிவு, பதிவாளர் என இன்னும் பல ஒரு பிரதேச செயலகத்திற்கு தேவையான அனைத்து திணைக்களங்களின் ஆளணியினருடனும் இயங்கிவரும் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் இவ் ஆளணியினருடைய அனைத்து அலுவலக விடயங்களுக்குமான தலைமை அதிகாரியாக இப்பிரதேச செயலகத்தின் உப பிரதேச செயலாளரே செயற்படுகின்றார். இதில் எந்த திணைக்களத்தின் அதிகாரிகளும் உப அதிகாரிகள் அல்லர்.

இவ்வாறான நிலையில் வழமையான செயற்பாடுகளில் பதிவாளர் திணைக்களத்தின் கீழ் இயங்கும் காணிப் பதிவகம் மட்டும் தமது செயற்பாடுகளை கல்முனை பிரதேச செயலகத்தின் கீழ் கொண்டு வந்தமைக்கான காரணம் என்ன? இச்செயற்பாடுகளில் அரசியல்வாதிகளுடன் கல்முனை பிரதேச செயலாளரும் இணைந்து தமது செயற்பாடுகளை வடக்கு பிரதேச செயலக விடயத்தை நீர்த்துப்போகச் செய்ய முடுக்கிவிட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

## காணிப்பதிவகம் மாற்றப்பட்டது ஏன்?

அரச அதிகாரிகள் என்போர் அரசின் கொள்கைகளை மக்களுக்கு செயற்படுத்துவதை அவர்களது பிரதான கடமையாக கொண்டிருக்க வேண்டும். இந்த நிலையில் கல்முனை பிரதேச செயலாளர் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தன்னால் நிர்வாகம் செய்யப்படவேண்டுமென எண்ணி செயலாற்றுவதாக அறிய முடிகின்றது. இதே சிந்தனை உத்தியோகத்தர் ஒவ்வொருவருக்கும் எழுமாயின் வடக்கு பிரதேச செயலகத்தின் சம்பந்தப்பட்ட அனைத்து துறை உத்தியோகத்தர்களுக்கும் மேற்பார்வை உத்தியோகத்தர்கள் கல்முனை பிரதேச செயலக உத்தியோகத்தர்களாக இருக்க வேண்டும் என்கின்ற நிலைமை ஏற்படும்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் உத்தியோகத்தர் விடயத்தில் இனரீதியான எந்த பாரபட்சங்களையும் மேற்கொள்வதில்லை. மாறாக ஏனைய அலுவலகங்களுக்கு முன்மாதிரியாகவே இயங்கி வருகின்றது. நிருவாக கட்டமைப்புக்கு ஏற்ப பாகுபாடின்றி அனைவருக்கும் உரிய இடங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், கல்முனை பிரதேச செயலகத்திலோ அண்மைக்காலமாக இனரீதியாகவே சகலமும் இடம்பெறுவதை அவதானிக்க முடிகின்றது.

ஏறத்தாழ முப்பது வருடங்குக்கும் மேற்பட்ட சேவை அனுபமுடைய முதலாம் தர முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் இரண்டாம் தர அல்லது மூன்றாம் தர குறைந்த கால அனுபவம் உடைய உத்தியோகத்தர்களால் முகாமை செய்யப்படுகின்றனர். உப அலுவலகம் என முஸ்லிம் அரசியல்வாதிகளாலும் சில அரச அதிகாரிகளாலும் சுட்டிக் காட்டப்படும் வடக்கு பிரதேச செயலகத்தில் அதிவிசேட தர முகாமைத்துவ உத்தியோகத்தர் நிருவாக உத்தியோகத்தராக கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ள நிலையில் கல்முனை பிரதேச செயலகத்தில் முதலாம் தர முகாமைத்துவ உத்தியோகத்தரே நிருவாக உத்தியோகத்தராக பணிக்கமர்த்தப்பட்டுள்ளார். கல்முனை பிரதேச செயலாளர் தனக்கு கீழ் இயங்கும் அலுவலகமாக வடக்கு பிரதேச செயலகத்தை கருதினால் விசேட தர உத்தியோகத்தரை கல்முனைப் பிரதேச செயலகத்தில் பணிக்கு அமர்த்த முயற்சித்திருக்க வேண்டும்.

இனரீதியாக அலுவலகங்களுக்கு நியமனங்கள் மேற்கொள்ள முடியாத சூழ்நிலையில், இவ்வாறு இனரீதியான முரண்பாடுகளின் தோற்றுவாக சமூகங்கள் கலந்து வாழும் கல்முனையில் அரச நிறுவனங்களே செயற்பட்டுவருவது எதிர்காலத்தில் தனியான சமூகங்கள் வாழும் பகுதிகளிலுள்ள அரச நிறுவனங்கள்வரை பாகுபாடுகள் விரிவடைய வாய்ப்புகளை ஏற்படுத்தும்.

நிதி முகாமைத்துவம் தவிர அனைத்து பிரதேச செயலக கடமைகளும் வடக்கு பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. நிதி தொடர்பான கடைமைகளைப் பெறுவதில் எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் முஸ்லிம் அரசியல்வாதிகளின் விபச்சார அரசியல் வியூகத்தால் தடுக்கப்பட்டிருந்தன.

இலங்கையை பொறுத்தவரை மாறி மாறி சிங்கள ஆட்சியாளர்கள்தான் ஆட்சி பீடம் ஏறுவர் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

தமிழர்களுக்கும், தமிழர் பிரதேசங்களுக்கும் அரசியல் சம்பந்தமான தீர்வாயினும் அதேபோல் சாதாரண அன்றாட நிருவாக தேவைகளும்கூட அதே சிங்களப் பெரும்பான்மை அரசிடமிருந்தே கிடைக்கப்பெற வேண்டும். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரச எதிர்ப்பு அரசியலை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தும் முஸ்லிம் கட்சிகள், தமிழர்களுக்கு எதிரான தமது தேவைகளை மிகவும் எளிதாக அரசைக் கொண்டே நிறைவேற்றிக் கொள்கின்றன.

தொடர்ச்சி 9ஆம் பக்கம்...

**பேரண்ட உலகில் ஒரு சிறு தீவு. அது உலகின் அத்தனை நாடுகளையும் தன் பக்கம் ஈர்த்துக் கொண்டு இருந்தது ஓர் காலம்.**

# ஒவ்வொருவரிலுமிருந்து மாற்றங்கள் உருவாகட்டும்

அதன் அழகிலும், அமைவிடத்திலும், வணிகத்திலும், கல்வி துறையிலும், விளையாட்டிலும், தனக்கென்றே தனித்துவமான பாரம்பரியத்திலும் சரி தன்னை அடையாளப்படுத்திக் கொண்டே இருந்தது அந்த சிறு தீவு.

ஆனால், இன்று எட்டு திசைகளிலும் பரந்தகடல் எங்கும் சிக்கித் தவிக்கின்றது அந்த சிறு தீவு.

உற்றுநோக்கி ஆய்வு செய்துபார்த்தால் பல துறைகளிலும் பல சவால்கள் என்பார்வையில்பட்டது.

**அப்படி என்னதாங்க இருக்கு?**

**வாங்க பார்த்திடலாம்...**

தொடர்ச்சியாக விண்ணைத்தொடும் விலை மட்டங்களின் அதிகரிப்பினால் சமுகத்தின் அனைத்து மட்டதினரும் தங்களின் வருமானத்தினை விட அதிகளவிலான செலவினை நிகழ்காலத்தில் எதிர்கொள்கின்ற நிலமை ஏற்பட்டிருக்கின்றமையினால் தங்களின் வாழ்க்கைதரத்தினை உயர்த்திகொள்ள முடியாத சூழல் ஏற்பட்டு இருக்கின்றது.

எதிர்கால அவசர தேவைகளுக்காக சேமிப்பில் இருக்கின்ற தொகையினை கூட நிகழ்கால செலவினை ஈடுசெய்து கொள்ள பயன்படுத்துகின்ற நிலையினால் எதிர்கால சேமிப்புமட்டம் வீழ்ச்சி அடைந்து செல்கின்றது.

நேரம் அது பொன்னானது என்று சொல்லப்படும். ஆனால், இன்றைய நாட்களில் அதிகளவான நேரம் எரிபொருள் நிரப்பும் நிலையங்களிலே கழிகின்ற நிலை உருவாகியிருப்பது கவலையான விடயம்தான்.

எரிபொருள் பெற்றுகொள்ள அதிகளவான நேரம்செலவு செய்வதனால் உற்பத்தி பொருட்களுக்கான மூலப் பொருட்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படுகின்றது, இதனால், உள்நாட்டு உற்பத்திமட்டம் எதிர்கணியமாற்றத்தினையே பதிவுசெய்கின்றது.

ஊழியர்கள் உரிய நேரத்திற்கு அலுவலகங்களுக்கு செல்ல முடியாமை, பொது போக்குவரத்தில் தங்கி இருக்க வேண்டிய நிலை, அவசரதேவைகளை உரியநேரத்தில் பூர்த்தி செய்யமுடியாமை, மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளை சீராக முன்னெடுக்க முடியாமை போன்ற பலசவால்களை எதிர்கொள்ள வேண்டி உள்ளன.




தினக்கூலிபெறும் தொழிலாளர்களின் வேலை நேரம் குறைகின்றதனால் வருமானம் வீழ்ச்சி அடைகின்றது. இதனால், அவர்களின் அன்றாட வாழ்க்கை செலவினை கூட ஈடுசெய்ய முடியாத நிலை ஏற்பட்டு இருப்பதனையும் அவதானிக்க கூடியதாய் இருக்கின்றது.

கல்வி அது என்றுமே அழிக்க முடியாத ஆயுதம்.

தற்காலத்தில் மாணவர்கள் தங்களின் கற்றல் செயற்பாடுகளைதடை இன்றி தொடர்சியாக முன்னெடுக்கமுடியாமல் உள்ளதை அவதானிக்க முடிகின்றது, மின்சாரத் தடை காரணமாக இரவு வேளைகளில்மாணவர்கள்கற்றல்செயற்பாடுகளில் ஆர்வம் குறைவாகவே இருக்கின்றது.

இதனால், கல்வி மட்டம், அடைவுமட்டம்சரிந்துசெல்கின்ற நிலை இருப்பதாக பொதுவான கருத்தும் இருக்கதான் செய்கின்றது.

திறமைவாய்ந்த கல்வியாளர்கள், ஊழியர்கள், மாணவர்கள் பலர் தங்களின் உயர்கல்வி, தொழிலினை அடிப்படையாக கொண்டு வெளிநாடுகளுக்கு இடம்பெயர்கின்ற நிலை அதிகளவில் ஏற்பட்டு இருக்கின்றது.

இம்மாற்றமானது உள்நாட்டில் கல்வியாளர்களை இழக்கவேண்டி இருக்கின்றது, ஊழியர் இடப்பெயர்வு ஏற்படுகின்றது. இதனால் உள்நாட்டில் எதிர்கால சந்ததியினர் பாதிப்படைய கூடியநிலை ஏற்படக் கூடும்.

எரிபொருளுக்கான விலை அதிகரிப்பினால் அனைத்து அத்தியா வசிய பொருட்களின்விலைஅதிரிக்கின்றமைபலதரப்பினருக்கும் தாக்கதினை ஏற்படுத்துகின்றது.

இவை தவிர கலை, கலாசார, பொது நிகழ்வுகள் கூட நடாத்த முடியாமலும், தங்கள் பண்பாடுகளை பேணிகொள்ள முடியாத நிலையும் ஏற்பட்டு இருக்கின்றது.

எது எப்படியோ.. இந்நிலைக்கான முற்றுப்புள்ளி எப்போது என்பதுதான் அனைவரினதும் ஒரே ஒரு கேள்வியாக இருக்கின்றது. மாற்றம் ஒவ்வொருவரிலும் இருந்தே ஆரம்பமாகட்டும். சவால்களை எதிர்கொண்டு எதிர்கால சுபிட்சமான வாழ்வை நோக்கி பயணம் தொடரட்டும்...

**இதுவும் கடந்து போகும்..**

**ஆய்வுகளுடன்...**
**நிகோஷ்**

2ஆம் பக்க தொடர்ச்சி...

## கல்முனையில் ஒரு காலிமுகத்...

முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டியவர்கள் தமிழ் மக்கள். எங்களுக்கு முன்னுரிமை தாருங்கள் என்று ஒருபோதும் கேட்கவில்லை. நாங்கள் சுதந்திரமாக இயங்க எங்களது உரிமையை தாருங்கள். அதனூடாக நாங்கள் எங்களை அபிவிருத்தி செய்து கொள்கின்றோம் என்றுதான் 30 வருட காலமாக கோரி நிற்கிறார்கள்.

உங்களுடையதில் எங்களுக்கு எந்த பங்கும் வேண்டாம். ஆனால், எமக்கு அரசினால் வழங்கப்பட வேண்டியவைகளை தடுக்காதீர்கள். அவற்றை எங்களுக்கு தந்து விடுங்கள் என்று கேட்கின்றார்கள். அவர்களது கேள்வி நியாயமற்றதா?

இன்று காலிமுகத்திடலில் இளைஞர்கள் அனைவரும் இலங்கை பிரஜைகளாக ஒன்றிணைந்து உள்ளனர். அவ்வாறே கல்முனையில் வாழுகின்ற அனைத்து இளைஞர்களும் இலங்கை பிரஜைகளாக ஒன்றிணைந்து எமது சகோதர இனம் பெற வேண்டிய உரிமைகளை நாமே பெற்றுக் கொடுக்க நம்மிடையே கைகோர்ப்போம். கல்முனையிலும் ஒரு காலிமுகத்திடல் உருவாக வேண்டும். அது தமிழ் மக்களின் வாழ்க்கையில் அவர்களுடைய பிரதேச சுய ஆட்சியில் அவருடைய சுய அபிவிருத்தியில் காத்திரமான பங்கை தரம் உயர்த்தப்பட்ட பிரதேச செயலகம் ஒன்றின் மூலம் வழங்க வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

சொந்த வட்டாரம் பிரிபடும்போது பாராமுகமாக இருந்தவர்கள் எல்லைநிர்ணயமென பூச்சுத்துகின்றனர்.

எல்லைகளின் நிர்ணயத்தை காரணங்காட்டி அவர்களுடைய உரிமையை மறுப்பது அறிவுடமையோ அறமோ அன்று.

8ஆம் பக்க தொடர்ச்சி...

## கூட்டமைப்பின் தயவில்

இந்த முஸ்லிம்களின் தந்திரோபாய தமிழர் எதிர்ப்பு அரசியலை அம்பாரை தமிழர்கள் எப்போதோ உணர்ந்துவிட்டனர். அதன் எச்சரிக்கையின் எதிரொலிதான் கடந்த பொதுத் தேர்தலின் பலாபலனாக மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரை மட்டுமன்றி தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இழக்க நேரிட்டது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏற்படுத்திய இடைவெளியை சரியாக பயன்படுத்திய கப்பலோட்டியும் “ஆப்பரேசன் சக்சஸ் ஃபேசன் டெத்” என்பது போல் வந்த வேலையை கச்சிதமாக முடித்துக்கொண்டு மாயமானார்.

அதன் பின்னரும் அவர்கள் போக்கில் மாறுதல்கள் இல்லாத “இணங்க மறுப்பவர்களுடன் இணங்கிப் போவோம்” என்ற நிலை தொடர்கையில், அம்பாரை தமிழர்களால் “ஏற்கனவே எல்லாவற்றையும் இழந்துவிட்டோம். இனி இழப்பதற்கு எம்மிடம் எதுவுமில்லை” என்பதாய் அம்பாரையில் இருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு துடைத்து எறியப்படும் நாள் வெகுதொலைவில் இல்லை.



# பொன்விழா காணும் பன்முக ஆளுமை லோகேந்திரலிங்கம்

கோவிலூர் செல்வராஜன்

கலை இலக்கிய பத்திரிகை துறைகளில் ஐம்பது ஆண்டுகள் அயராது இயங்கி பணியாற்றி பொன்விழா காணும் எனது இனிய நண்பர் நட்பின் நாயகன் திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களுக்கு வாழ்த்து சொல்லும் தருணம் இது.'மலையன்பன்' என்ற பெயரில் தாயகத்தில் இருக்கும்போதே பத்திரிகைகளில் பல படைப்புகளை எழுதிய படைப்பாளி.

எழுபதுகளில் கல்முனை பிராந்தியத்தில் மின்சார திணைக்களத்தில் இவர் பணிபுரிந்தபோது அனைத்து ஊர்களுக்கும் பணி நிமித்தம் சென்று வருவார். எனது ஊரான திருக்கோவிலுக்கும் வருவார். ஊரில் நான் ஒரு கலை நிகழ்ச்சி செய்தபோது (மறைந்த நண்பர் கே. எஸ். ராஜாவுடன்)அந்த நிகழ்ச்சிக்கும் வந்திருக்கின்றார். அப்போதே கலை இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாட்டோடு இருந்தவர். நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலையால் நாட்டைவிட்டு புறப்பட்டு கனடாவுக்கு புலம்பெயர்ந்தார்.

கனடாவுக்கு வந்தும் தமிழ் பற்றும், இலக்கிய ஆர்வமும், படைப்பாற்றலும் அவரை பத்திரிகைத்துறையில் கால்பதிக்க வைத்தது. இவர் 'உதயன்' வாரப் பத்திரிகையை ஆரம்பித்து அதற்கு கடந்த வருடம் வெள்ளிவிழாவும் கண்டார்.

26 ஆண்டுகளாக இந்த பத்திரிகையை மிக சிறப்பாக அதன் ஆசிரியராக, வெளியீட்டாளராக இருந்து நடத்திக் கொண்டு வருவது சாதாரண விசயமில்லை. இது ஓர் இமாலய சாதனை என்றே சொல்லுவேன். நானும் ஆரம்பத்தில் பத்திரிகைத் துறையில் இருந்தவன் என்ற அனுபவத்தில் இதை என்னால் உணரமுடியும். அந்த வகையில் நண்பர் லோகன் அவர்கள் பாராட்டுகளுக்கும், வாழ்த்துகளுக்கும் பாத்திரமானவரே. இவருக்கு பல நாடுகளில் பாராட்டுகளும், விருதுகளும் கிடைத்திருக்கின்றன.



ஒருமுறை எனக்கும், இவருக்கும் அவுஸ்திரேலியாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது கிடைத்தது. கனடாவிலிருந்து அவரும், லண்டனிலிருந்து நானும் சென்று அந்த விருதைப் பெற்றோம். அவை மறக்கமுடியாத தருணங்கள்.

அவர் விருதுகள் பெறுவது ஒருபக்கம் என்றால் இவர் தனது 'கனடா உதயன்' பத்திரிகை விருதுகளை வருடா வருடம் கொடுப்பது மறுபக்கம். ஆம் வருடா வருடம் கனடா விருதுகளை சர்வதேச ரீதியில் இவர் வழங்கி வருகிறார். இந்த கனடா உதயன் விருது எனக்கும் 2017ல் இவரால் வழங்கப்பட்டது. விருது வழங்கும் விழாக்களை மிக சிறப்பாக செய்து முடிப்பதில் நண்பன் லோகனுக்கு நிகர் அவரே.

இவர் உதயன் பத்திரிகையில் வாராவாரம் 'கதிரோட்டம்' என்ற தலைப்பில் எழுதிவரும் ஆசிரியர் தலையங்களை தொகுத்து 'இதுவரை' என்ற நூலை 2013 ல் பதிப்பித்து வெளியிட்டார். இந்த நூலை அறிமுகம் செய்ய லண்டன் வந்திருந்தார். அந்த நேரம் இவருடன் இருந்த தருணங்கள் அலாதியானவை.

அவ்வப்போது எனது கட்டுரை, கவிதை, சிறுகதை என்று எனது படைப்புகளும் இவரது உதயன் பத்திரிகையில் வருவதுண்டு.

எனது நூல்கள் கனடாவில் அறிமுகம் செயப்படும்போதெல்லாம் தனது ஆதரவையும், ஒத்துழைப்பையும் தருபவர்.

தனது கடின உழைப்பால் ஐம்பது ஆண்டுகள் கலை, இலக்கிய, பத்திரிகைத் துறையில் பயணித்து பொன்விழா காணும் எனது அன்பு நண்பன் லோகேந்திரலிங்கம் அவர்களை மனதார வாழ்த்தி மகிழ்கின்றேன்.

# கல்முனையில் நடைபெற்ற அம்பாறை மாவட்ட பெண் எழுத்தாளர்கள் ஒன்றுகூடல் 2022






அண்மையில் 2022 ஆம் ஆண்டுக்கான கல்முனை வடக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கிழக்கு மாகாண அம்பாறை மாவட்ட பெண் எழுத்தாளர்கள் ஒன்றுகூடல் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திரு.நவநீதன், எழுத்தாளர் உமா வரதராஜன், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி என்.புள்ளேநாயகம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் அனுஷியா அவர்கள், டாக்டர் (திருமதி) புஷ்பலதா லோகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.


இந்நிகழ்வில், கவிதா நிகழ்வொன்றை வழங்கிய நர்த்தனாலயா குழுவினரும், கலாசார அலுவலர் திரு.பிரபாகரனும் படங்களில் காணப்படுகின்றனர்.

**உலகிலேயே நீரில் மூழ்கி ஆட்கள் அதிகம் இறக்கும் விகிதங்களில் இலங்கையும் இடம்பிடித்துள்ளது.**

**இலங்கையில் ஒரு நாளில் மூன்றுக்கும் மேற்பட்ட இறப்புகள் சம்பவிப்பதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

**வருடாந்தம் சுமார் 800 - 1000 பேர் இலங்கையில் நீரில் மூழ்கி இறக்கின்றனர் எனக் கண்டறியப்பட்டுள்ளது.**

# கல்குடா சுழியோடிகளின் உயிர்காக்கும் சேவைகள்



வ. சக்திவேல்

பொலிஸாரின் கூற்றுப்படி, பெரும்பாலும் வார இறுதி மற்றும் நீண்ட வார இறுதி நாட்களில் நீரில் மூழ்கும் சம்பவங்கள் நிகழ்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில், தற்செயலான மரணங்களுக்கான இரண்டாவது முக்கிய காரணமாக நீரில் மூழ்குதல் இடம்பிடித்துள்ளதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு அறிக்கையின்படி, இலங்கையில் நீரில் மூழ்கும் நிகழ்வுகளில், குளியல், விவசாயம், கட்டுமானம், பொழுதுபோக்கு நடவடிக்கைகள் போன்ற தினசரி வாழ்க்கை என்பன நீரில்



மூழ்குவதற்கான ஆபத்துக் காரணிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

மது அருந்துதல், படகுகளில் லைஃப் ஜக்கெற் இல்லாதது, மோசமான கண்காணிப்பு நடைமுறைகள், அடை மழைக் காலத்தில் வெள்ளம் மற்றும் பாதுகாப்பற்ற கிணறுகள் மற்றும் திறந்த நீர்த்தேக்கங்கள், நீர் நிலைகள் ஆகியவை நீரில் மூழ்கி இறப்பதற்கு பங்களிக்கும் காரணிகளாக அடையாளம் காணப்படுகின்றன.

நீரில் மூழ்குவதில் பெண்களை விட ஆண்களுக்கு நான்கு மடங்கு அதிக வாய்ப்பு உள்ளது.

இலங்கையில் நீரில் மூழ்குவதால் இறப்புக்கள் அதிகரித்திருக்கும் இவ்வாறான தொரு சூழ்நிலையில் மட்டக்களப்பு கல்குடா சுழியோடிகள் அணி தற்துணிவாகவும் தன்னார்வத்துடனும் முன்வந்து உயிர்காப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

பரந்து விரிந்த வங்காள விரிகுடா கடலில் பாசிக்குடா - கல்குடா கடல் பிரதேசம் வெளிநாட்டு, உள்நாட்டு உல்லாசப் பயணிகளின் வருகையால் சர்வதேச மட்டத்தில் பெயர் பெற்றது.

அந்தக் கடலில் தவழ்ந்து, மிதந்து, நீந்தி, மூழ்கி சாகசம் புரியும் ஒரு அணியாக **'கல்குடா டைவர்ஸ்'** அணி உருவாகி இருக்கிறது.

இடர்களின்போது ஆபத்தில் சிக்குவோரை காப்பாற்றுவதற்கென்று தொடங்கிய சிந்தனை இப்பொழுது பெரியதொரு இடர்காப்பு அணியாக உருவாகுவதற்கு உதவியிருக்கின்றது.



தாங்கள் கல்குடா மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தோடு மட்டும் தங்களது உயிர்காப்பு தன்னார்வத் தொண்டுப் பணியை வரையறுத்துக் கொள்ளாமல் நாட்டின் எந்தப் பாகத்திலும் நீரில் மூழ்கியவர்களை சுழியோடித் தேடுதல் நடத்தி அவர்களை மீட்டெடுக்கும் பணியை முற்றிலும் இலவசமாகவே செய்ய சித்தமாக இருப்பதாக கல்குடா சுழியோடிகள் தெரிவிக்கின்றனர்.



இன, மத, பிரதேச வேறுபாடு கடந்த கல்குடா சுழியோடிகள் அணியின் உயிர்காப்புப் பணிகள் சிலாகித்துப் பேசப்பட்டு வருகின்றன.

இந்த அணியைச் சேர்ந்த 47 சுழியோடிகள் கடந்த வார இறுதியில் **'ஸ்ரீலங்கா லைப் சேவிங்'** எனும் அமைப்பினால் நீச்சல் பயிற்சி, நீரில் மூழ்குவோரை காப்பாற்றல், நீரில் மூழ்கி காணாமல் போவோரை சுழியோடித் தேடுதல் உள்ளிட்ட பல்வேறு உயிர்காப்புத் திறன்களில் பயிற்சியளிக்கப்பட்டார்கள்.

3 கட்டங்களாக இடம்பெற்ற **'உயிர்காக்கப் பயில்வோம்'** எனும் இந்தப் பயிற்சி நெறியில் பங்குபற்றிய 47 பேரிலிருந்து இருவர் சுழியோட்டத்தின் சர்வதேச தரத்திற்கு தேர்வு பெற்றுள்ளார்கள்.

அந்த அணியின் சுழியோடிகளான 21 வயதுடைய முஹம்மத் கபீர் இப்றாஹிம், மற்றும் 27 வயதுடைய அப்துல் மஜீத் ஹலீம் ஆகியோர் 7 நிமிடங்களில் சுமார் 200 மீற்றர் கடல் தூரத்தை நீந்தியும் மேலும் 100 மீற்றர் தரைத் தூரத்தை ஓடியும் முடித்து தமது ஆற்றலை நிறுவியுள்ளனர்.

சுழியோடிகள் அணியின் தலைவராக கபீர்பௌஸ்தீன் இயங்கி வருகின்றார். செயலாளராக அப்துல் மஜீத் ஹலீம் செயற்பட்டு வருகின்றார்.

**'ஏ - விஷன்'** நிறுவனம் சுழியோடிகளை மேலும் சர்வதேச தரம் வாய்ந்த ஆற்றலுள்ளவர்களாகப் பயிற்றுவிப்பதிலும் அதனோடு இணைந்ததாக இடர்களிலிருந்து மக்களை விழிப்பூட்டுவதிலும் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது.

எதிர்காலத்தில் இந்த சுழியோடிகள் அணி ஒவ்வொரு மாவட்டத்திலும் அதன் சேவைகளை விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. அவசர உதவிச் சேவைக்கு 0779915841, 0762828338, 0777176652 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என்கிறார் **'ஏ - விஷன்'** பணிப்பாளர் சதீக்.

இடர்களினால் பாதிக்கப்படுவோருக்கு இன மத பேதமில்லை என்ற நியதியின் அடிப்படையில் இந்தப் பணியை நாங்கள் செய்து வருகின்றோம் என பெருமையுடன் கூறுகின்றார் கல்குடா **'ஏ - விஷன்'** அமைப்பின் முதன்மை ஆலோசகரும் சமூக சேவையாளருமான அப்துல் காதர் நியாஸ்.

அவர் மேலும் கூறுகையில், உயிர் காப்பு சேவைக்கூடாக இந்தப் பிராந்தியத்திலும் நாட்டிலும் இனங்களுக்கிடையில் நல்லுறவைக் கட்டியெழுப்புவதே எமது நோக்கம்.

கடந்த டிசெம்பெர் மாதத்தின் நடுப்பகுதியிலிருந்து இதுவரை கடல் பிராந்தியத்தில் இடம்பெற்ற 4 நீரில் மூழ்கிய சம்பவங்களில் எமது **'கல்குடா டைவர்ஸ்'** அணி பிரசன்னமாகியிருந்தது.

முன்னதாக கல்குடா கடலில் தமிழ் சகோதரர் ஒருவரின் சடலத்தை மீட்டெடுத்துக் கொடுத்தோம்.



எதிர்காலத்தில் இதுபோன்ற சிறந்த சுழியோடிகளை உருவாக்குவது எமது இலக்காகும். பாடசாலை மாணவர்களுக்கு நீச்சல் கற்பிக்கவும் உயிர் காப்பு நடவடிக்கையில் ஈடுபடவும் பயிற்சியளிக்கவுள்ளோம். தற்போது எமது அணியில் ஆண்கள் மட்டுமே சுழியோடிகளாகப் பயிற்றப்பட்டுள்ளார்கள். இடர்களில் அகப்பட்டு பாதிக்கப்படும்போது அவர்களில் ஆண்கள் பெண்கள் என்ற வித்தியாசமில்லை. நீரில் மூழ்கும் நிலைமை எவருக்கும் ஏற்படலாம். அதனால் இந்த ஆற்றல்களில் பெண்களின் பங்கும் இருக்க வேண்டும் என கல்குடா சுழியோடிகள் அணியின் நிருவாகக் குழு தெரிவிக்கின்றது.

கல்குடாவிலுள்ள **'ஏ - விஷன்'** நிறுவனம் தோற்றம் பெற்று அதன் கீழ் பெண்கள் பிரிவு, கல்விப் பிரிவு, நிவாரண சேவைப் பிரிவு, சுழியோடிகள் அணி என 4 கிளைகள் இயங்கி வருவதாக ஏ.விஷன் நிறுவனத்தின் பணிப்பாளர் ஏ.எஸ்.எம். சதீக் கூறுகின்றார்.

இவர் நிறுவனத்தின் சமூக சேவைக்கு மேலதிகமாக ஒரு ஆசிரியராகவும் ஊடகவியலாளராகவும் பணியாற்றி வருகின்றார்.

தமது ஒருங்கிணைந்த **'ஏ - விஷன்'** நிறுவனத்தின் சேவைகள் பற்றி அவர் மேலும் கூறுகையில், தற்போதைய சூழ்நிலையில் இலங்கையில் கடல், வாவி, ஆறு, குளம் மற்றுமுள்ள நீர் நிலைகளில் ஆட்கள் நீரில் மூழ்கி மரணித்தல் அதிகரித்துள்ளது. அதனால் எமது சுழியோடிகள் அணி அதன் சேவையை விஸ்தரித்துள்ளது.



0779915841
0762828338
0777176652
0751374140
0779350045
0773268610
0774440103
0777776106
கல்குடாவிற்கான அனர்த்த அவசர சேவை

சரித்திரப் பார்வை



# நுளம்பு தனித்துவமான ஈழத்தமிழ் வழக்கு

நுளம்பு எனும் பெயர் வழக்கு இலங்கையில் நீண்டகாலமாக பயன்பாட்டில் இருந்து வருகிறது. மெலிந்த தோற்றம் கொண்டவர்களைக்கூட நுளம்பர்என அழைக்கும் வழக்கமும் இலங்கையில் உண்டு. தமிழ்நாட்டில் இதற்கு ஒத்த பயன்பாடாக கொசு எனும் சொல் காணப்படுகிறது. கொசுவலை கொசுவத்தி முதலியவற்றையும் நாம் தமிழ்நாட்டு வழக்கில் கேட்டிருக்கிறோம். ஆயினும் இலங்கை தமிழ் வழக்கில் நுளம்பு வலை எனும் சொல்லையே பயன்படுத்துகிறோம்.

ஈழத்தமிழ் வழக்கான நுளம்பு சங்கத் தமிழிலிருந்து நமக்கு கிடைத்தது.

ஆரம்ப காலங்களில் நுளம்பின் பெருக்கம் தற்போது காணப்படுவது போல ஆண்டு முழுவதும் தொல்லை தரும் ஒன்றாக இருக்கவில்லை. குறித்த காலப்பகுதியில் மட்டும் நுளம்பின் நடமாட்டத்தை மக்கள் உணர்ந்தனர். அதுவும் பொதுவாக மாடு வளர்க்கும் தொழுவங்களிலும் காடுகளை அல்லது வயல்களை அண்டிய பகுதிகளிலும் பெரிதும் காணப்பட்டது. ஆனால் தற்காலத்தில் இலங்கை, இந்தியா போன்ற வெப்ப வலய நாடுகளில் நுளம்பு ஆண்டு முழுவதும் தொல்லை கொடுக்கும் ஒரு பீடையாகக் காணப்படுகிறது.

நுளம்பு மனிதர்களுக்கு மட்டுமன்றி மாடு முதலான கால்நடைகளுக்கும் கடிக்கக் கூடியது. இந்த நுளம்பு என்ற சொல்லை வெண்கொற்றனார் என்ற புலவர் குறுந்தொகையில் கையாண்டுள்ளார். இந்தச் சங்கத்தமிழ் வழக்கே இலங்கையில் நுளம்பை அழைக்கப் பயன்படுகிறது.

குறுந்தொகையின் 86 ஆவது பாடல் (குறிஞ்சித் திணை – தலைவி தோழியிடம் சொல்வதாய் அமையும் பாடல்) இவ்வாறு அமைகிறது.

**“சிறை பனி உடைந்த சேயரி மழைக் கண்**
**பொறை அரு நோயொடு புலம்பு அலைக் கலங்கிப்**
**பிறரும் கேட்குநர் உளர் கொல் உறை சிறந்து**
**ஊதை தூற்றம் கூதிர் யாமத்து**
**ஆன் நுளம்பு உலம்பு தொறு உளம்பும்**
**நா நவில் கொடு மணி நல்கூர் குரலே”**

உறைபனி பொழியும் கூதிர்காலத்தின் ஊதைக்காற்று வீசும் சாமப்பொழுது. தன் தலைவனின் பிரிவினால் துயராற்றாமல் விழியோரம் நீர் சிறைப்பட்டு ஈரம்காயாத கண்ணோடு அவன் நினைவாக தூக்கமின்றி தவிக்கும் தலைவி தன் தோழியிடம் கேட்கிறாள்,

**‘நுளம்பு பசுவை கடிக்கிறது. அது தன் தலையை ஆட்டி அசைத்து நுளம்பை ஓட்டுகிறது. அதன்போது கழுத்தில் கட்டியிருக்கும் மணி ஒலிக்கிறது. இவ்வாறு மீண்டும் மீண்டும் நுளம்பு கடிக்கும் போதெல்லாம் விட்டுவிட்டு ஒலிக்கும் மாட்டின் கழுத்தில் உள்ள மணியோசை இந்த நடுநிசியில் எனக்கு கேட்பது போல பிறருக்கும் கேட்குமா?’** என்கிறாள்.

ஈழத்தில் பயன்படும் நுளம்பு எனும் சொல்லின் மொழி வரலாற்றுக்கு இப்பாடல் சான்று கூறுகிறது. நாம் பயன்படுத்தும் நுளம்பு எனும் பதம் தொன்மையான செந்தமிழ்ச் சொல்லாகும்.



சஞ்சீவி சிவகுமார்

# இலங்கைக்கு வழங்கப்பட்ட பண்டைய பெயர்களில் தமிழின் தாக்கம்

பண்டைக் காலத்தில் இலங்கையும் இந்தியாவும் இணைந்த நிலத் தொடர்பு கொண்டு காணப்பட்டமை பற்றி சில வரலாற்றுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. சங்க காலத்தில் தமிழகத்துடன் இலங்கை முதலிய பகுதிகளும் அடங்கியிருந்தன என பி. ரி. ஸ்ரீநிவாச ஐயங்கார் முதலிய ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதுகுறித்து வரலாற்றுக் காலத்தில் இலங்கையும் தமிழகமும் ஒன்றிணைந்த திராவிட பண்பாடு நிலவிய பிரதேசங்களாகவும் நேரடித் தொடர்புகளை கொண்டு காணப்பட்ட மையையும் வரலாற்று இலக்கிய தகவல்கள் தெளிவுபடுத்துகின்றன.

இலங்கை குறித்து பேசப்படும் மிகப் பண்டைய பெயர்களில் ஒன்று ‘பழசுமுண்டு’ என்பதாகும். இதை சிலர் இலங்கையின் காலத்தால் முந்தைய ஒரு தலைநகரம் எனவும் கொள்வர். இலங்கையின் இராவணன் காலத்துத் தலைநகரம் திருகோணமலைக்கு அருகில் இருக்கக்கூடிய கடல் கொண்ட பகுதி ஆகவும் கொள்ளப்படுவதுண்டு.

எது எப்படியோ, ‘பழசு’ என்பது காலத்தால் முந்தியது எனும் பொருளையும் ‘முண்டு’ என்பது மேடான பகுதி என்பதையும் குறிக்கக்கூடிய தமிழ்ச் சொற்களாகும். ஆராய்ச்சியாளர்கள் இந்தச் சொல்லை *Palasuemundu* என ஆங்கிலத்தில் எழுதும் போது ஒரு வேற்றுமொழிச் சொல் போல தோன்றினாலும் பொருள் பொதிந்த தமிழ்ச் சொல்லாக இது காணப்படுகிறது.

சிங்கள மொழியின் தோற்றம் இன்றைக்கு 1300 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒன்று என பேராசிரியர் புஞ்சி பண்டா எக்கநாயக்க சுட்டிக்காட்டுவார். ஆனால் இலங்கை என்ற தமிழ்ப் பதம் பழையது. சில பழைய நூல்களில் காணப்படும் செய்யுள்களில் இலங்கையை சிறப்பிக்க ‘சீரிலங்கை’ எனும் சிறப்புப் பெயர் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. இதுவே ஸ்ரீலங்கா என சிங்கள உருமாற்றத்தை பெற்றிருக்க முடியும்.

அப்படியாயின் இலங்கையை சிங்களத் தீவு என்கிறார்களே என்ற கேள்வியும் எழலாம். இப்பெயர் ‘சிம் ஹலடீவ்’ எனும் சமஸ்கிருத மொழிச் சொல்லிலிருந்து பெறப்பட்டது. ‘சிம் ஹல’ என்பதன் பொருள் கருவாப்பட்டை என்பதாகும். இலங்கை கருவாப்பட்டை விளையும் முதன்மையான நாடாக இருந்ததனால் இப்பெயர் வழங்கப்பட்டதாக முத்துத் தம்பிப்பிள்ளை தனது ‘இலங்கை சரித்திர சூசனம்’ எனும் நூலில் குறிப்பிடுவார்.

இலங்கைக்கு ‘தாமிரவருணி’ என்ற ஒரு பெயரும் காணப்படுகிறது. தாமிரம் என்பது செம்பு அல்லது செம்மை நிறத்தை குறிக்கும். செந்நிற மண் கொண்ட பிரதேசம் என்பதைக் குறிக்க இப்பெயர் பயன்படுத்தப்பட்டது.

இலங்கைக்கு செரண்டிப் என்ற மற்றொரு பெயரும் உள்ளது. இது ‘சேரன் தீவு’ என்ற சொல்லில் இருந்து திரிபடைந்து வந்த வடிவம் என ஆய்வாளர்கள் சிலர் விளக்குகின்றனர். இலங்கையில் தொடக்ககால குடியேற்றமாக சேரர்களின் குடியேற்றம் கொள்ளப்படுவதுண்டு. இதனால் இலங்கை சேரர்களின் தீவு என வர்ணிக்கப்பட்டது. இவ்வாறு சேரன் தீவு, செரன்டிவ் ஆயிற்று.

இந்த வகையில் திராவிட பண்பாட்டோடு நெருங்கிய வரலாற்றுப் பின்புலத்தை இலங்கை தன் பெயர்களின் வழியே தேக்கி வைத்திருக்கிறது.





# ஆளுமை உயரும் போது தலைமைத்துவப் பண்பும் உயரும்

கல்முனை ஏ. ஜதனா

**“இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்”** என்ற அடிப்படையில் நாமும் எமது சமூகமும் எமது தேசமும் நலமுடனும் உயர்வுடனும் திகழ்வதற்கு இன்றைய மாணவர் உலகமானது மிகச்சிறந்த ஆளுமையுடன் கூடிய தலைமைத்துவப்பண்பை வளர்த்துக் கொள்ள வேண்டியதும் அவசியம் ஆனதாகும்.

மாணவர்களது ஆளுமை உயர்வடையும் போது சிறந்த தலைமைத்துவப் பண்பு கொண்டவர்களாக அவர்களால் உருவாக முடியும். அந்த ஆளுமை உணர்வினை மாணவர் களுக்கு வழங்குவதில் குடும்பம், சமூகம், பாடசாலை, நண்பர்கள் ஆகியோருடன் அதிபர், ஆசிரியர் ஆகியோ ரும் பங்கு கொள்கின்றனர். பாடசாலையைப் பொறுத்த வரை மாணவத் தலைமைத்துவம் என்பது மிக முக்கி யமானதொன்றாகும்.

இதனால் மாணவர் சார்ந்த செயற்பாடுகள் ஒவ்வொன் றும் மிக மிக அவதானத்துடன் கையாளப்பட வேண்டிய தொன்றாகும். பாடசாலையில் மாணவர்களும் தமது பொறுப்புணர்வை கருத்தில் கொண்டு ஆரோக்கிய சிந்தையுடன் செயற்பட வேண்டும்.

இலங்கையில் கடந்த காலங்களிலும் தற்காலத்திலும் பல்வேறு சமூகங்களும் தாக்கத்திற்குட்பட்பமையாலும் பல்வேறு பிரச்சினைகளாலும் இச்சமூகத்தினரின் செயற்றிறன்கள் மழுங்கடிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய தாக்கங்களிலிருந்து விடுபட்டு அனைத்து சமூகத்தினரும் மாணவர்களின் சகல துறை வளர்ச்சியிலும் கருத்துடன் செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

அதனடிப்படையில் மாணவர்களது ஆற்றல்களையும் ஆளுமையையும் தலைமைத்துவப் பண்பையும் மேம்படுத்துவதற்குரிய இடமாக திகழ்வது பாடசாலை யாகும். மாணவர்கள் பாடசாலை யில் பல்வேறு வயது மட்டத்தில் தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர். பாடசாலை என்பது பல்வேறுபட்ட பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதும் மக்க ளுக்கு மத்தியில் முறை சார்ந்த தொடர்பினை உருவாக்கவும் சிக்கலான ஓர் பணியை முகாமைப்படுத்தவும் அதனை அழகாக ஒழுங்குபடுத்தும் உருவாக்கப்பட்ட அமைப் பாகும்.

இளம் தலைமுறையினரை எதிர்கால குடும்பத்தின், சமூகத்தின், தேசத்தின் தலைவர்களாக பரிணமிக்கக்கூடிய மாணவர்களாக உருவாக்குவது பாடசாலையின் கடமையாகும். சிறந்த தலைவர்களை கொண்டிராத சமூகமும் நாடும் ஒரு போதும் முன்னேறியதில்லை. எமது நாட்டினை இதற்கு உதாரணமாக கூறலாம்.

மாணவர்களது திடமான மனமும் தொழிற்பாடும் ஆளுமையை உருவாக்கும். மாணவர்களிடையே சிறந்த தொடர்பாடல் திறனும் தலைமைத்துவ உயர்விற்கு வழிகாட்டுகிறது. ஆற்றும் கருமங்களில் ஒழுங்கினை பேணுதல், நேர முகாமைத்துவம் முதலியனவும் மிக முக்கியமான தலைமைத்துவ பண்புகளாகும்.

தலைமைத்துவப் பண்புகளை ஒவ்வொரு மாணவனிடத்திலும் வளர்க்க வேண்டிய கடமை ஒவ்வொரு பாடசாலையையுமே சார்ந்தது.



# மாணவர் ஆளுமை வளர்ச்சியில் யோகா

**யோகம் ஆன்மீகப் பாதையில் அழைத்துச் சென்று, மாணவர்களுக்கு உள்நிலை உணர்வை வெளிப்படுத்துகின்றது.**

**ஆளுமை வளர்ச்சி என்பது உடல் மனம் அறிவு, உணர்ச்சி, ஆன்மீகம், நாட்டுப் பற்று போன்றவற்றில் நிறைவுடையதா இருக்க வேண்டும்.**

உடல் அளவில் ஆளுமை வளர்ச்சி என்பது உடல் உறுப்புக்கள் சிறந்த முறையில் இயங்கி நோய்களிலிருந்து விடுபட்டு ஆரோக்கியத்துடன் இருத்தல். “சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்” என்பதற் கமைய எமது உடல் ஆரோக்கி யமாக இருந்தால்தான் நாம் எதை யும் செய்யக் கூடியதாக இருக்கும். மாணவர்களின் உடலானது எப்பொழுதும் திறமையுடைதாகவும், நினைத்தவுடன் செயல்படுத்தக் கூடியதாகவும், வலுவுடையதாகவும் வளைந்து கொடுக் கக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

மனதளவில் ஆளுமை என்பது கற்பனைவளம், படைப்பாற்றல், மனதில் உறுதி போன்றவற்றை உள்ளடக்கியதாக இருத்தல். மாணவர்கள் யோக நெறியை கடைப் பிடிக்கின்ற பொழுது அவர்களுடைய கற்பனா சக்தி, படைப்பாற்றல், மன உறுதி அதிகரிக்கின்றது. என்பதை ஆராய்ச்சியாளர்கள் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். பொதுவாக கலைஞர்கள் என்று கூறப்படுகின்ற இசைக் கலைஞர்கள், ஓவியக்கலைஞர்கள் திரைப்பட கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், பொறியியலாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் ஒரு வேலையை செய்கின்ற பொழுது அவ்வேலை பெரிதாக இருந்தாலும் சிறிதாக இருந்தாலும் அவ் வேலையை செய்து முடிக்க மன உறுதி அவசியமாகும்.

மனம் உறுதி அடைவதோடு மனதை அமைதிப்படுத்தி செய்யக்கூடிய காரியங்களை திறம்பட செய்ய கூடிய ஆற்றலையும், பல சவால்களை எதிர்கொண்டு வெற்றி அடைய கூடிய வல்லமையையும், துணிச்சலையும் யோகம் கொடுப்பதோடு பல பிரச்சினைகளை சாதகமாக மாற்றி அதை வாய்ப்பாக பயன் படுத்தி வெற்றி அடைய கூடிய தன்மை யையும் உருவாக்குகின்றது.

அறிவு என்பது எமது நாட்டின் கல்வியின் நோக்கத்தில் ஒன்றாக அமைந்துள்ளது. மன ஒருங்கிணைப்பு, சிந்தனை, அறிவுக் கூர்மை என்பவற்றால் சிறப்படையும் மாணவர்கள் கஷ்டங்கள், கவலைகள், துன்பங்கள் வரும் பொழுது அதில் இருந்து வெளிவர முடியாமல் தவிக்கின்ற மனப்பான்மையும் வாழவேண்டிய வயதில் தற்கொலை செய்து உலக வாழ்வை முடித்துக் கொள்வதையும் காணக்கூடியதாக உள்ளது.

இதிலிருந்து முழுமையாக விடுபடக்கூடிய அறிவு வளர்ச்சியோடிணைந்த ஆளுமையை யோகம் உருவாக்கிறது.

உணர்ச்சியைப் பொறுத்த வரையில் பல வேளைகளில் மாணவர்களின் நடத்தையை, நடத்தைக் கோலங்களை அது நிர்ணயிக்கிறது. உணர்ச்சிகளின் கொந்தளிப்புகளை, மனப் போராட்டங்களை வெற்றி கொள்ள முடியாமல் தவிக்கும் மாணவர்கள் பெரும் துன்பங்களுக்கும் அமைதி இன்மைக்கும் ஆளாகின்றனர். இவற்றிலிருந்து விடுபட உணர்ச்சிபூர்வமான ஆளுமை வளர்ச்சி அடைய வேண்டும். இதனை நிவர்த்தி செய்ய யோகம் உதவுகின்றது.

ஆன்மீக வளர்ச்சி என்பது உடல் ரீதியானது. மனதின் உள் நிலையை நோக்கி செல்வதாகும். புறச் சூழலை உணர்ந்து அதற்கேற்ப தங்களை மாற்றி அமைக்கும் மாணவர்கள் தங்களது கற்பனை, சக்தி, படைப்பாற்றல், உடற்கட்டு போன்றவற்றைக் கொண்டும் அதிக அறிவுத் திறன் கொண்டும் பல்வேறு செயற்பாடுகளை செய்கின்ற போதும் தனது உள்நோக்கிய பயணத்தை சிந்திக்காது செயல்படுகின்றார்கள். யோகம் ஆன்மீகப் பாதையில் அழைத்துச் சென்று மாணவர்களுக்கு உள்நிலை பற்றிய உணர்வை வெளிப்படுத்துகின்றது.

நாட்டுப்பற்று என்பது ஒவ்வொரு மாணவர்களுக்கும் கட்டாயமாக இருக்க வேண்டிய ஒன்று.அப்போதுதான் அவர்கள் தாங்கள் முன்னேறுவதோடு நாட்டையும் முன்னேற்ற பாடுபடுவார்கள். மாணவர்கள் குறுகிய மனப் பான்மையோடு செயல் படாமல் பரந்த மனப் பான்மையுடன் செயல் படுத்த தக்கதாக அமைய வேண்டும். மாணவர்களுக்கு இளமையிலேயே இதனை ஏற்படுத்தி சரியான முறையில் பயன்படுத்த வழிப்படுத்த வேண்டும்.

நேர்மையுடனும் சத்தியத்துடனும் வாழ ஆன்மீக வளர்ச்சி முக்கியமானதாகும். சத்தியம் வாழ்க்கையின் உன்னதமான இடத்தை மாணவர்களுக்கு அளிக்கிறது. இதற்கு ஆன்மீக ஞானம் முக்கியமானது.உள் வெளிப்புற சவால்களை வெற்றிகொள்ள யோகம் உதவுகின்றது.

பொதுவாக யோக நெறியில் மாணவர்களை ஈடுபடுத்து கின்ற போது முழுமையான ஆளுமையை மாணவர்கள் பெறுவதோடு தங்களுக்கு மட்டுமன்றி மற்றவர்களுக்கும் உதவுபவர்களாக நாட்டுக்கும் சேவை செய்பவர்களாக முழுமையான ஆளுமை நிறைந்தவர்களாக செயற்படு வார்கள்.

இதற்காக நாம் மாணவர்களை இளமைக் காலத் தில் இருந்தே யோக நெறியில் அவர்களை இணைத்து முழுமையான ஆளுமை உடைய மனிதர்களாக மாற்றி சமுதாயத்தில் அவர்களை உயர்நிலையை அடையச் செய்வதோடு அவர்களுடைய ஆளுமை சமுதாயத்துக்கு பயன்படுத்தக்கூடியதாக அமையும்படி செய்ய வேண்டும். அப்போதுதான் நேர்மை உடன், சத்தியத்துடன், மற்றவர்கள் பாராட்டத்தக்க வகையில் பெருமையுடன் நாட்டினுடைய சொத்தாக சமுதாயத்தில் சவால்களுக்கு முகம் கொடுத்து எதிர்காலத்தில் சிறந்த மனிதர்களாக வாழ்வார்கள்.

கலாபூஷணம்
கா.சந்திரலிங்கம்

# தமிழகத்தில் கால் பதிக்கும் இசையமைப்பாளர் திஷோன்

யாழ் மண்ணில் பிறந்த விஜயமோகன் திஷோன் தற்போது இசைத்துறையில் சாதனை படைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். விஜயமோகன் மாலதி தம்பதிகளுக்கு மூத்த மகனாக பிறந்தார். இவர் ஷெரோன், ஆரோன், பென்ஹொனோன் என மூன்று இளைய சகோதரர்களுடன் திருநெல்வேலியில் வசித்து வருகிறார்.

தன்னுடைய கல்வியை மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையில் பயின்றார். பாடசாலை காலம் முதலே கலைத்துறையில் குறிப்பாக இசைத்துறையில் பெரும் ஆர்வம் இவரை பின்தொடர்ந்தது.





கல்விகற்கும்காலத்திலேயே18வயதிலிருந்து கீபோர்ட் வாத்திய கலைஞராக தன்னை பல மேடைகளில் நிரூபித்தார். இதிலிருந்து இசை தான் தன் மூச்சென பல கஷ்டங்களை தாண்டி சிறிய அளவிலான ஒரு கலையகத்தை உருவாக்கி தன் நண்பர்களின் கைகொடுப் போடு 4 வருட உழைப்பில் படிப்படியாக பெயர் சொல்லும் அளவிலான படைப்புகளை வெளியீடு செய்தார்.

அதனூடாக குறுகிய காலத்திலேயே பெரும் ரசிகர்களின் மனதில் இடம்பிடித்தார். இப்போது தன் ஒவ்வொரு படைப்புக்களையும் தரம் வாய்ந்ததாக வழங்கக் கூடிய பெரிய கலையகத்தை கட்டியமைத்து பயணித்து கொண்டிருக்கிறார்.

இந்த கலையகம் அவருடைய கனவு எனலாம் தங்கள் சிறிய சிறிய படைப்புக்களில் கிடைத்த ஒவ்வொரு துளி பணத்திலும் தான் இது சாத்தியமானது. இதற்கு மிகப்பெரிய ஒத்து ழைப்பை அவருடைய குடும்ப மும் நண்பர்கள் வட்டமும் வழங்கியது.

இவருடைய இசைப் பயணத் தில் அடுத்த கட்ட முயற்சியாக 2021 மார்ச் மாதம் ரெப் சிலோன் எனும் வலையொளி பக்கத்தை உருவாக்கி 50 இற்கு மேற்பட்ட பாடல்களை இவருடைய நண்பர் களான வாகீசன் இராசையா அடவிக் உதயகுமார் ஆகியோ ரின் கூட்டு முயற்சியில் 85000 பின்தொடருனர்களோடு வெற்றிநடை போடுகிறார்கள்.

அதன்அடுத்த வெற்றிப்படியாக தாயகம் தாண்டி தமிழகத்திலும் கால் பதித்து சூப்பர் சிங்கர் மானசியுடன் இணைந்து **“கனவு தேவதை”** எனும் காணொளி பாடலை வெளியிட்டார்கள். அது தற்போது இலட்சம் பார்வையாளர்களை கடந்து ரசிகர்களின் பெரும் வரவேற்பைப் பெற்று வருகிறது.

மேலும் தன்னுடைய இசை முயற்சியில் மலேசிய முழுநீள திரைப்படம் ஒன்றில் இசையமைப்பாளராக பணியாற்றுகிறார். இன்னும் நிறைய நல்ல படைப்புகளை வெளியிடுவதோடு பல திரைப்படங்களில் இசையமைப்பாளராக கைகோர்க்க வேண்டும் என்ற கனவோடு தன் முழு முயற்சியையும் முதலிட்டு வருகிறார்.



**யாழ்ப்பாணத்தில் கல்வி கற்கும் காலத்தில் கீபோர்ட் கலைஞராக திகழ்ந்தவர்**

இந்த தருணத்தில் அவருக்கு கீபோர்ட் கற்றுக் கொடுத்த ஜெரால்ட் வழிகாட்டிய இசையமைப்பாளர் பத்மயன் சிவானந்தன் துணைநிற்கும் நண்பர்கள் மற்றும் நல்ல வரவேற்பை தரும் அன்பான ரசிகர்கள் என அனைவருக்கும் நன்றி கூறிகிறார்.

**திஷோனின் நனவாகிக் கொண்டிருக்கும் கனவுப் பயணம் முழுதாய் வெற்றி காண எமது வாழ்த்துகள்.**

# கல்வித்துறையில் துளிர் விடும் ருஸ்னா

இளங்கலைஞர் அறிமுகம்

கு. கிலசன்



மிஹிந்தலை பிரதேசத்தில் கடுகெலியாவ எனும் கிராமத்தில் பிறந்த ருஸ்னா அ/கனந்தரா கடுகெலியாவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை உயர் கல்வியை கிரி/ கெகுணகொல்ல தேசிய பாடசாலையில் தொழிநுட்பப் பிரிவிலும் கற்று 3 பாடங்களில் சித்தியும் பெற்றார்.

ஆனாலும் பல்கலைக்கழக வாய்ப்பு கிட்டாமையினாலும் குடும்ப வறுமை காரணமாகவும் மேற்கொண்டு கற்க முடியாமல் தொழில் வாய்ப்பொன்று தேடினார். அப்போது தொழில் வாய்ப்பு கிடைக்காத போதிலும் ஆங்கில பயிற்சி எனும் டிப்ளோமாவை முடித்து கேம்பிரிட்ஜ் சர்வதேச பாடசாலையில் 8 மாதங்கள் வரை கற்பித்தார். எனினும் சில காரணங்களால் அங்கிருந்து விலகி *Sussex* சர்வதேச கல்லூரி எனும் ஆங்கில மொழி பாடசாலை யில் தற்போது கற்பித்து வருகின்றார்.



பாடசாலையில் கற்கும் காலத்திலேயே இவரது பேச்சு திறமையை பல இடங்களில் வெளிக்காட்டினார். சில சந்தர்ப்பங்களில் தனக்குள் மறைந்திருந்த பாடும் திறமையும் வெளிக்காட்டினார். ஆனாலும் அப்போது கவிதைத்திறன் எங்கும் வெளிப்படவில்லை.

நபிகள் நாயகத்தின் பிறந்த நாள் அன்றுதான் இவரது முதல் கவிதைக்கு உயிர் கொடுக்க வாய்ப்பு கிடைத்தது. அந்த கவிதைப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றதை தொடர்ந்து சாதாரண தரத்தில் கல்வி கற்கும் போது எழுதும் முறைகளை சரிவர கற்று தன்னைத் தானே பட்டை தீட்டிக் கொண்டார்.

அப்போது இவர் எழுதிய ‘அம்மா’ என்ற கவிதை தமிழ் ஆசிரியர் உட்பட பலராலும் பாராட்டப்பட்டது. பின்னர் 2016ம் ஆண்டு பாடசாலையில் நடத்தப்பட்ட கலைவிழாவில் கவிதைக்கான பாராட்டும் பரிசிலும் இவருக்கு வழங்கப்பட்டது.

தொடர்ந்து உயர் தர கல்வி கற்கும் போது விடுதியில் தங்கி இருந்து கற்றமையால் பல்வேறு பிரதேசங்களில் இருந்து வந்த நண்பர்களின் பழக்கம் கிடைத்தது. அப்போது கிடைத்த ஓய்வு நேரங்களும் தனிமையும் இவரது கிறுக்கல்கள் பலவற்றை பிரசவிக்க காரணமானது.

இவை கவிதைகள் என்பதை தாண்டி உணர்வுகளை வெளிப்படுத்தும் கிறுக்கல் களாக தொடர்ந்தது. அப்போது அவருடைய உயிர் தோழி ஒருவர் இவரது கிறுக்கல் கவிதையை ரசித்து பாராட்டிய அந்த நொடிதான் இன்னும் எழுத வேண்டும் என்ற ஆர்வத்தை மனதுள் விதைத்தது.

தொடர்ந்து எழுதினார் மூதூர் வாசிக சாலை வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றார்.

எதிர்காலத்தில் இன்னும் பல கவிதைகளை சமூக சிந்தனைகளுடன் எழுதி தனது கவிதை பயணத்தை தொடர்வதோடு விமர் சித்து தன்னை முடக்க நினைத்த அனைவர் முன்னும் தன் திறமையால் மிளிர வேண்டும் என்ற கனவோடு பயணிக்கும் ருஸ்னாவின் கனவு வெற்றி காண எமது வாழ்த்துகள்.

# ஊடகர் நடேசன் ஞாபகார்த்த நிகழ்வும் நூல் வெளியீடும்

**வ. சக்திவேல்**

மட்டக்களப்பில் வைத்து கடந்த 2004 ஆண்டு சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட சிரேஸ்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 18வது ஞாபகார்த்த தினம் எதிர்வரும் 31.05.2022 திகதி நினைவு கூரப்படவுள்ள நிலையில், அதனை முன்னிட்டு ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 18ஆவது ஞாபகார்த்த நிகழ்வும் "ஊடகர் ஜீ.நடேசன் நினைவலைகள்" கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடும் இன்று ஞாயிற்றுக்கிழமை (29.05.2022) இடம்பெற்றது.




கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் இ.தேவஅதிரன் தலைமையில் மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் 29ஆம் திகதி இடம்பெற்றதுடன், குறித்த நிகழ்வின்போது படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரின் திருவுருவப் படத்திற்கு வீரகேசரி பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் பீ.தேவராஜா மற்றும் கிழக்கு பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் அருட்பணி நவரெட்ணம் நவாஜி அடிகளாரும் இணைந்து மலர் மாலை அணிவித்து, நினைவுச் சுடரேற்றப்பட்டதனைத் தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டு, மௌன அஞ்சலியும் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியமும், சிவராம் ஞாபகார்த்த மன்றமும் (சுவிஸ்) இணைந்து வெளியிட்ட "ஊடகர் ஜீ.நடேசன் நினைவலைகள்" கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடும் இடம்பெற்றது.

நிகழ்வின் வரவேற்புரையை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றிய உபதலைவர் க.ஜெகதீஸ்வரனும், தலைமையுரையினை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஆலோசகரும் சிரேஸ்ட ஊடகவியலாளருமான, இ.பாக்கியராஜா நிகழ்த்தியதுடன், நூல் வெளியீட்டுரையினை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றிய தலைவர் இ.தேவஅதிரன் நிகழ்த்தினார்.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஆலோசகரும் சிரேஸ்ட ஊடகவியலாளருமான ஏ.எல்.எம்.சலீம் அவர்களினால் குறித்த நூல் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் ஆகியவற்றின் முன்னாள் தலைவரும் சிரேஸ்ட ஊடகவியலாளருமான இரா.துரைரெத்தினம், வீரகேசரியின் முன்னாள் பிரதம ஆசிரியர் பீ.தேவராஜா மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஊடகவியலாளருமான பா.அரியநேந்திரன், ஆகியோரினால் ஊடகர் ஜீ.நடேசன் தொடர்பான சிறப்பு நினைவுப்பகிர்வுகளும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இக்கட்டுரைத் தொகுப்பு நூலில் நடேசனின் நண்பர்கள், பத்திரிகையாளர்கள், நெருக்கமானவர்கள் எனப் பலரும் தமது நினைவகளைப் பகிர்ந்துள்ளனர். கடந்த 2021ஆம் ஆண்டு 17ஆவது ஞாபகார்த்த தினத்தில் வெளியிடவௌஉத்தேசிக்கப்பட்டிருந்த போதும் கொவிட் சூழல் காரணமாக குறித்த நூல் வெளியீடானது பிற்போடப்பட்ட நிலையில் இன்று வெளியீட்டு வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரன், இரா.சாணக்கியன், முன்னாளல் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான இந்திரகுமார் பிரசன்னா, மா.நடராசா ஊடகவியலாளர்கள், சமூக நலன் விரும்பிகள், மதகுருமார், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் என அதிகளவிலானோர் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியதுடன், சிறப்பு நூல் பிரதிகளையும் பெற்றுக்கொண்டிருந்தனர்













# உளவளத்துணையில் ஒத்துழைப்பின்மை பாரிய சவால்!



# பெண்ணாக நின்று சமூகத்தை மாற்ற முனைகிறேன்

## திருமதி. கலாதேவி சந்திரகுமார்

மங்கையர் மகுடம்

ஜெனிதா மோகன்

"உளவியல் கோட்பாட்டின் படி ஒவ்வொரு மனிதனும் தனது சுயதேவையினை அடிப்படைகளாகக் கொண்டே செயற்படுவான். அவனின் தேவை நிறைவேற்றப்படும் போது அவனுக்கு வாழ்வூக்கமும் அதிகரிக்கும். அப்போது நேராக சிந்திக்கத் தொடங்குவதுடன் குடும்பத்தின் மனைவி, பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகவும் உயர்வுக்காகவும் பாடுபடுவான்."

**இவ்வாறு கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் உளவளத்துணை உத்தியோகத்தராக கடமையாற்றி வரும் திருமதி கலாதேவி சந்திரகுமார் அவர்கள் குடும்பப் பிரச்சினைகள் தொடர்பாக தெளிவுபடுத்தியிருந்தார்.**

**அவருடான நேர்காணலின் முழு வடிவம் இதோ.**

**கே: உங்களைப் பற்றி...?**

எனது பட்டக்கல்வியை கிழக்குப் பல்கலைக் கழகத்தில் ஆரம்பித்து முதல் வருடத்திலேயே பொருளியல் விஷேட துறையில் கற்பதற்கான வாய்ப்புக் கிடைத்தது. அதன் மூலம் வர்த்தக முகாமைத்துவ துறைக்குள் உள்நுழைந்தேன். அதில் இரண்டாம் வகுப்பு மேல் பிரிவில் சித்தி பெற்று அங்கேயே ஒன்றரை வருடங்கள் தற்காலிக உதவி விரிவுரையாளராக கடமையாற்றினேன். அதன் பின்னர் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் கல்வித்துறையில் பட்டமேற் படிப்பையும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் உளவளத்துறையில் பட்ட மேற்படிப்பையும் முடித்துள்ளேன்.

**கே: உங்களின் தொழில் வரலாறு பற்றி கூறமுடியுமா?**

2005 தொடக்கம் 2010 வரை நிகழ்ச்சித் திட்ட உதவியாளராக நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் திட்டமிடல் பிரிவிலும் 2011 தொடக்கம் 2016 வரை அபிவிருத்தி உத்தியோகத்தராக கல்முனை முஸ்லிம் பிரிவு பிரதேச செயலகத்தில் சமூக சேவைப் பிரிவிலும், 2016 ஏப்ரல் முதல் 2021 மார்ச் வரை மீண்டும் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் உளவளத்துணை உத்தியோகத்தராக கடமையாற்றி தற்போது கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் எனது சேவையினை மேற்கொண்டு வருகின்றேன்.

அமைச்சினால் வருடாவருடம் உளவளத்துணை தினத்தன்று வெளியிடப்படும் "உபதேசனா" சஞ்சிகைக்கான ஆக்கங்களையும் எழுதி வருகின்றேன். அமைச்சினால் பணிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட குடும்ப குழு உளவளத்துணை சேவைகளை வழங்குவதுடன் மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், பெற்றோர்கள், முதியோர்கள். விஷேட தேவையுடையோர்கள் போன்றவர்களுக்கான உளவளத்துணை மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சிகளையும் மற்றும் உலக உளநல தினநிகழ்வை விஷேட உளநல வைத்திய நிபுணர்களைக் கொண்டு பிரதேச மட்டத்தில் நடாத்தி வருகின்றேன்.

சமூகத்தில் அடையாளங் காணப்பட்ட உளப்பிரச்சினைகளான உளநெருக்கீடு, உளச்சோர்வு, பதகளிப்பு, அச்சநோய், பீதி நோய், நெருக்கீட்டுக்குப்பிற்பட்ட மனவடு, எண்ணச்சுழல் நோய், மெய்ப்பாடு, மனோ பாவக்கோளாறு, பித்து, தீவிர உளமாய நோய், உளப்பிளவை நோய், மற்றும் போதைப் பொருளுக்கு அடிமையாதல் போன்ற உள நோயாளர்களை அடையாளங்கண்டு வைத்திய சிகிச்சைக்கு அனுப்பி வைப்பதுடன், தேவையானோருக்கு உளவளத்துணை சேவையையும் வழங்கி வருவதுடன் பல குடும்ப பிரச்சினைகளை தீர்த்து சந்தோஷமான குடும்ப கட்டமைப்பினையும் ஏற்படுத்தி வருகின்றேன்.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் உளவளத்துணை கற்கைநெறியின் கள மேற்பார்வையாளராகவும், உளநல மேம்பாட்டுக்கான நிறுவனமும் அம்பாறை போதனா வைத்தியசாலையின் உளநலப் பிரிவும் இணைந்து நடாத்தும் உளவியல்சார் சமூகப் பணியாளர்களுக்கான கற்கைநெறியின் பகுதிநேர விரிவுரையாளராகவும், கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் பெண்கள் வன்முறைப்பிரிவு மற்றும் மனநலப் பிரிவிலும் உளவளத்துணை சேவையை வழங்கி வருவதுடன் வசதி வாய்ப்புக்கள் தேவையானோருக்கு அந்தந்த அரச, அரசசார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்களுடன் தொர்பினை ஏற்படுத்தி வழிப்படுத்தியும் வருகின்றேன்.

**கே: உளநோய்களை குணப்படுத்த முடியுமா?**

"ஆம்" உடலுக்கு நோய் ஏற்படுவதனைப் போல உள்ளத்திற்கு நோய் ஏற்பட்டால் அது உளநோய் எனப்படும். ஒருவரின் சிந்தனை, மனவெழுச்சி, நடத்தைக்கோலம் என்பவற்றில் அசாதாரண நிலை காணப்படும் போது அவர்களை அசாதாரன நடத்தையுடையோர் என அடையாளப்படுத்தலாம். உளநோயை குணப்படுத்த மருத்துவ சிகிச்சை அவசியமாகும். இதற்காக அநேக வைத்தியசாலைகளில் தனியான உளநலப் பிரிவொன்று இயங்கி வருகின்றது. உளநல வைத்தியர்களின் பரிந்துரைகளின் பிரகாரம் சரியான மருந்தினை சரியாக பாவிப்பதன் மூலம் உளநோயைக் குணப்படுத்த முடியும். ஆனால் உளக் கோளாறுகளை (Psychological Disorders) குணப்படுத்த உளவளத்துணைச் சிகிச்சை போதுமானதாகும். இருந்தாலும் மருத்துவச் சிகிச்சை தேவைப்படுவோருக்கு சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

உளவளத்துணை என்பது ஒருவரது பிரச்சினையின் போது அவருக்கு ஆலோசனை வழங்குவதோ, தீர்வு கொடுப்பதோ, பலவந்தப்படுத்துவதோ அல்ல. இதனை அனைவரும் விளங்கிக்கொள்ள வேண்டும். ஆனால் எம்மில் சிலர் எங்களாலும் இச்சேவையை வழங்க முடியும் என்ற தவறான மனப்பாங்கில் உள்ளனர். இதனால் சேவைநாடி குழப்பமடையவோ, உளக்கோளாறு இன்னும் அதிகரிக்கவோ வாய்ப்புள்ளது. எனவே, உளவளத்துணை என்பது பிரச்சினைக்கு உட்பட்ட ஒருவருக்கு அவரிடம் மறைந்திருக்கின்ற சக்கி, திறன்களை வெளிக்கொண்டு வருவதன் மூலம் நம்பிக்கையீனத்தை இல்லாமல் செய்துடன் ஆளுமையை விருத்தி செய்து அவரே அவரது பிரச்சினையை தீர்த்துக்கொள்வதற்கு வழியமைத்துக்கொடுக்கும் அறிவியல் ரீதியானதொரு பொறிமுறையாகும்.

**கே: குடும்பப் பிரச்சினை தொடர்பில் பெண்களுக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**

குடும்பம் என்பது ஒரு ஆணும் ஒரு பெண்ணும் சட்ட ரீதியாகவோ,சட்ட ரீதியற்ற முறையிலோ சேர்ந்து வாழ்வதன் மூலம் பெற்றெடுக்கும் குழந்தைகளையும் உள்ளடக்கியதொரு அலகாகும். இன்றைய காலகட்டத்தில் குடும்பப் பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன. இதனால் குடும்ப கட்டமைப்பு சீர்குலைந்து பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குரியதாக மாற்றமடைந்துள்ளது.

எனவே, ஒவ்வொரு பெண்ணும் தன் குடும்பத்தின் சந்தோஷத்தினையும் உயர்வினையும் மனதில் கொண்டு செயற்பட வேண்டும். காதலிக்கும் போதும் திருமணம் முடித்த ஆரம்ப காலப்பகுதியிலும் இருந்த அன்பும் காதல் மொழியும் வற்றிப்போவதனாலும் பாலியல் திருப்தியின்மை, சிறந்த தொடர்பாடலின்மை, தனிப்பட்ட விருப்பு-வெறுப்புக்களின் செல்வாக்கு காரணமாகவும் குடும்ப பிரச்சினை ஏற்படுகின்றன.

உளவியல் கோட்பாட்டின் படி ஒவ்வொரு மனிதனும் தனது சுயதேவையினை அடிப்படைகளாகக் கொண்டே செயற்படுவான். அவனின் தேவை நிறைவேற்றப்படும் போது அவனுக்கு வாழ்வூக்கமும் அதிகரிக்கும். அப்போது நேராக சிந்திக்கத் தொடங்குவதுடன் குடும்பத்தின் மனைவி, பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகவும் உயர்வுக்காகவும் பாடுபடுவான். ஆனால் அவனின் தேவைகள் நிறைவேற்றப்படாத போது, அவனுக்கு சாவூக்கம் ஏற்படும். இதனால் அவனுள் ஏற்படுகின்ற சாவூக்கமானது பழிவாங்கும் உணர்வை தோற்றுவித்து குடும்ப வன்முறைக்கு வழிவகுக்கும். எனவே, ஒவ்வொரு குடும்பபெண்களும் கணவரின் உடலியல் தேவை உட்பட அனைத்து தேவைகளையும் அறிந்து மதித்து நடப்பது சந்தோஷமான, வன்முறையற்ற வாழ்க்கைக்கு வழிவகுக்கும்.

**கே: இத்தொழிலில் நீங்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்ன..?**

உளநோய்கள் பற்றி சமூகத்தின் மத்தியில் காணப்படும் சமூகவடு காரணமாக வெளியில் சொன்னால் தமது குடும்ப கௌரவம் பாதிக்கப்படும் என்பதனால் உளவளத்துணையாளிடமோ, உளவைத்தியரிடமோ கொண்டு செல்லாமல் செய்வினை, சூனியம் சாத்தானின் வேலை என்று சொல்லி வீட்டில் அடைத்து வைத்து மாந்திரீக முறையில் சிகிச்சையளிக்கின்றனர். மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் ஒத்துழைப்பின்மை, குடும்ப பிரச்சினைகளில் சம்பந்தப்பட்டவர்கள் ஒத்துழையாமையால் இச்சேவைக்குள் அவர்களை உள்வாங்க முடியாதுள்ளது. தொடர்ச்சியான அமர்வுகளுக்கு கலந்து கொள்ளாமை, உளவளத்துணை சேவைக்கென தனியான இடம் ஒதுக்கப்படாமை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

தற்பொழுது அமைச்சு இச்சேவையின் முக்கியத்துவம் கருதி உளவளத்துணையாளர்களுக்கு தனியானதொரு அறை வழங்கப்பட்டு அதே இடத்தில் இருந்தவாறே சேவைநாடிக்கு இடையூறு இல்லாமல் சேவையை வழங்க வேண்டும் என்ற எண்ணக்கருவுக்கு அமைய ஒதுக்கீடுகளை வழங்கிய போதிலும் சில பிரதேச செயலகங்களில் உள்ள உத்தியோகத்தர்களின் உளப்பாங்கு காரணமாக அதிலும் பெரும் சவாலை எதிர்நோக்க வேண்டியுள்ளது. என்று கூறுகிறார்.

பேட்டி: ஜெனிதா மோகன்

## இம்ரானின் ஏற்பாட்டாளர்களை கட்டுப்படுத்த

# இரும்புச்சட்டம் கட்டவிழ்க்கப்படுகிறதா?

பாதி, பழிவாங்கல், பாதி, விழிபிதுங்கல் என்ற நிலையில் தான் பாகிஸ்தான் அரசியல் பயணிக்கிறது. சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து அங்கு எந்தப் பிரதமரும் பதவிக் காலத்தை பூர்த்தி செய்ததில்லை. இடையில், எந்த சக்திகளாவது வந்து கதிரையை கவிழ்த்துவிடும். இது, வெளிநாட்டுச் சக்தியா? இல்லை உள்நாட்டு சக்தியா? என்ற சர்ச்சையில் பிரதமர்களின் பாதிக்காலம் கடந்துவிடுவதும் உண்டு. என்ன செய்வது? அந்நாட்டு அரசியலமைப்பு அவ்வாறுள்ளது.


இதற்காகத்தான், இந்த அரசியலமைப்பு மாற்றப்பட வேண்டுமென தற்போது கருத்துக்கள் எழத் தொடங்கியுள்ளன. இதற்கு வித்தியாசமாக, புரட்சியால் பதவிக்கு வந்த ஜனாதிபதிகள், ஐந்து ஆண்டுகளென்ன அவர்கள் இறக்கும் வரைக்கும் இந்தப் பதவியை அனுபவித்துக் கொண்டுதானிருந்தனர். இதில், ஷியாஉல்ஹக் மற்றும் முஷர்ரஹ்ப் ஆகியோர் பிரதானமானவர்கள். ஒருவேளை, வெளிநாட்டு சக்திகளின் ஆதரவால் வந்ததால், இவர்களால் நிலைக்க முடிந்ததா? என்ற சிந்தனை இவ்விடத்தில் அவசியப்படாது.

இவ்விருவரும், இக்கதிரைகளிலிருந்து காலியான விதங்கள்தான், இந்தச் சிந்தனையை அவசியமற்றதாக்கிறது. இந்து சமுத்திர நாடுகளில், சக்திமிக்கதாக வளரும் பல நாடுகள் பாகிஸ்தானைச் சுற்றியிருக்கையில், இந் நாட்டில் ஏற்படும் அரசியல் கொந்தளிப்புக்களே, இதை வளரவிடாமல் தடுக்கிறது எனலாம். ஒருவேளை, அருகிலுள்ள இந்தியாவோடு அளவுக்கதிகமாக மார்பு தட்டும் மனநிலைதான், இந்நாட்டு அரசியலைக் குழப்புகிறதோ என்றும் சிலர் சிந்திப்பதுண்டு. இத்தனைக்கும் இந்தியாவைச் சீண்டும் உள்நாட்டுப் பிரசாரங்கள்தான், பாகிஸ்தான் தேர்தலில் வெற்றியைத் தீர்மானிக்கின்ற விடயமாக இருப்பதுதான் இதிலுள்ள விந்தை.

எனவே, அயல்நாட்டைப் பகைப்பது ஆபத்து, பகைக்காமல் பிரச்சாரம் செய்வது நஷ்டம் என்ற இருதலைக் கொள்ளி அரசியலே பாகிஸ்தானில் நிலவுகிறது. இந்நிலையில், அதாவது கிரிக்கெட் சர்வதேசப்புகழ் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் பதவி கவிழ்க்கப்பட்ட பின்னணியில், அங்கு அரசியல் களம் சூடாக்கப்பட்டு வருவதையே காண முடிகிறது. சுமார் மூன்றரை வருடங்களின் பின்னர் இம்ரான் பதவி கவிழ்க்கப்பட்டதால், சர்வதேசத்தின் பார்வைகள் இஸ்லாமாபாத்தில் குவியத் தொடங்கின.

**இதற்கான காரணங்களில் இரண்டுதான் பிரதானமானது.**

சர்வதேசப் புகழுக்குப் பின்னாலிருந்த சதிகள் எவை, என்ற அங்கலாய்ப்பும், இம்ரானின் மேற்குலகம் மீதான நேரடிக் குற்றச்சாட்டுக்களுமே! **'பாகிஸ்தான் எதிர்க்கட்சிகள் ஏகாதிபத்தியத்தின் பிடிகளிலிருப்பதாக'** இம்ரான்கான் பகிரங்கமாக அறிவித்தார். இவ்வாறு அறிவித்த பின்னர், இப்படி பின்னாலிருப்பது யாரென்ற ஆதங்கங்கள் அங்கு அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. இதனால், அடிக்கடி ஆர்ப்பாட்டம், அமர்க்களம் என, பாகிஸ்தான் கொதித்துக் கொண்டிருக்கிறது. இம்ரானை பதவி கவிழ்த்த சக்திகளை அடையாளம் காண்பதற்கு அம்மக்கள் என்றுமில்லாத ஆர்வத்துடன் உள்ளனர்.

இதற்கு முன்னர், இவ்வாறு நடந்த பதவி கவிழ்ப்புக்களின் ஆழ, அகலங்களை அறிவதற்கு மக்கள் இப்படி முன்னின்றதும் இல்லை. இதிலிருந்து ஒன்று நிரூபணமாகிறது. மிகப் பொரும்பாலான பாகிஸ்தானியர் இம்ரானை விரும்பியிருக்கின்றனர். இந்த விருப்பங்கள் இனி, வன்முறையாகவும் மாறலாம். முக்கிய நகரங்களில் நடாத்தப்பட்டு வரும் ஆர்ப்பாட்டங்கள் என்றோ ஒருநாள், தலைநகர் இஸ்லாமாபாத்தை முற்றுகையுமிடலாம். இம்ரானின் ஆதரவாளர்கள் தலைநகரைச் சுற்றி வளைக்கும் திட்டம், தீர்மானங்கள் எல்லாம் இப்போதிருந்தே தயார். இதனால், தலைநகரைச் சுற்றிவளைக்கும், திட்டத்துக்கு அனுமதி வழங்கப்படாது என, பாகிஸ்தான் அரசாங்கம் அறிவித்துள்ளது.

தேர்தலை நடாத்துமாறும், அமெரிக்காவின் நிகழ்ச்சி நிகரலுக்கு இணங்குவதை நிறுத்துமாறும் அழுத்தம் கொடுத்தே, தலைநகர் இஸ்லாமாபாத்தை இவர்கள் முற்றுகையிடவுள்ளனர். இதன் முன்னோடி, ஏற்பாடுகளாக நடந்த கூட்டத்தில் பொலிஸார் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இதையடுத்து, உஷாரடைந்த அரசாங்கம் சுமார் அறுநூறு பேரை கைது செய்துள்ளது.

இரும்புச் சட்டங்களை அவிழ்த்து, இருப்பைக்காக்க முனையும் ஷெபாப்ஷெரிபின் அரசாங்கம், இந்த விடயத்தில் எவ்வாறு சாதிக்கும்? **காலம் சொல்ல வேண்டிய பதிலிது.**

இதனால், எழுத்துக்களால் இதை கணிப்பிட முடியாதுள்ளது. இப்போதிருந்தே, இரு தரப்புக்களும் களங்களை குறி வைக்கின்றன. அரசாங்கத்தின் குறிகள் முந்தியதால், இம்ரானின், ஆதரவாளர்களின் வீடுகள், சொத்துக்கள் மற்றும் நடமாட்டங்கள் அவதானிக்கப்படுகின்றன. முக்கிய ஆதரவாளர்களின் வீடுகள், வங்கி கணக்குகள், தொடர்பாடல் சாதனங்கள் இன்னும் இணைத் தொடர்புகளில் தொடர்ந்து சோதனைகள், நடாத்தப்படுகின்றன.

இவ்வாறான, தேடுதல்கள் தொடர்ந்தால், பொலிஸாரை தாக்கப் போவதாக இம்ரான் கானின் ஆதரவாளர்கள் எச்சரித்துள்ளனர். இம்ரானின் ஆதரவாளர்களே பொலிஸாரை சுட்டதாக அரசாங்கம் கூறுகிறது.

ஆயுதக்கட்டமைப்பிலா, தலைநகர் சுற்றி வளைப்பு இடம்பெறப்போகின்றதென்ற சந்தேகத்தையும் இச்சம்பவம் தோற்றுவித்துள்ளது.

இன்னும், பொலிஸாரின் படுகொலையை கண்டித்து இம்ரான்கான் அனுதாப அறிக்கையைக் கூட வெளியிடவில்லை என, உள்துறை அமைச்சர் சனாஉல்லா குறிப்பிட்டுள்ளார். இந்தப் பின்னணியிலே, தலைநகரைச் சுற்றிவளைக்கும் திட்டத்துக்கு பாகிஸ்தான் பிரதமர் ஷெபாப்ஷரீபின் அரசாங்கம் தடைவிதித்துள்ளது.

முஸ்லிம் உலகின் முதல் விஞ்ஞானியைத் தந்த நாடு பாகிஸ்தான். இந்நாட்டு குடிமகனான காதிர்கான்தான் முஸ்லிம் முதல் விஞ்ஞானி. இவ்வளவு இருந்தும் இன்னும் பாகிஸ்தான் உள்நாட்டு அரசியல் குழப்பத்தில் மூழ்கியே கிடக்கிறது.


இது மட்டுமா? இந்த விஞ்ஞானியை மட்டுப்படுத்தி, பாகிஸ்தானை விட்டும் வேறு முஸ்லிம் நாடுகளுக்கு இந்த அறிவு செல்லாமல் தடுத்ததும் சர்வதேசம்தான். சுமார் பத்து வருடங்களாக புற்று நோயால் பாதிக்கப்பட்ட அணு விஞ்ஞானி காதிர்கானுக்கு மேற்குலகு மட்டுமல்ல அமெரிக்காவும் சிகிச்சையளிக்க முன்வரவில்லை.

ஏன், பாகிஸ்தான்கூட, வெளிநாடுகளின் அழுத்தங்களால் இந்த விஞ்ஞானியைக் கவனிக்கவில்லை. இவ்வாறான வெளிநாட்டு சதிகள் மற்றும் சக்திகள் இனிமேலும் பாகிஸ்தானுக்கு தேவையில்லை என்றே, தலைநகர் இஸ்லாமாபாத் சுற்றி வளைக்கப்படவுள்ளது.

அணு விஞ்ஞானி காதிர்கான் போலில்லாவிட்டாலும் இம்ரானும் பாகிஸ்தானின் ஒரு சொத்துத்தானே.

எனவே, இவரைக் கவிழ்த்த சக்தியையும் இந்த சுற்றிவளைப்பு அறிய விரும்புகிறதா?

## கிரேக்க கப்பல்களை வழிமறித்து அரேபிய கடற்பரப்பில் ஈரான் ஆதிக்கம்




அரேபியக் கடலில் சென்று கொண்டிருந்த கிரேக்கத்தின் இரண்டு எண்ணெய்க் கப்பல்களை நேற்று வெள்ளிக்கிழமை ஈரான் வழிமறித்துள்ளது.

ஈரான் கடற்படை ஹெலிகொப்டர்கள் இந்த கப்பல்களில் தரையிறங்கி, இவற்றை கைப்பற்றின.

சர்வதேச குற்றத்தில் இக்கப்பல்கள் ஈடுபட்டிருந்ததாக ஈரான் கூறுகிறது, ஆனால், என்ன வகையான குற்றமென்பது விளக்கப்படவில்லை.

இதுபற்றி, கருத்து வெளியிட்டுள்ள கிரேக்கம், "இதுவொரு கடற்கொள்ளை, சர்வதேச கடற்பரப்பில் பயணி க்கும் கப்பல்கள் பறிமுதல் செய்யப் படுவது அரசியல் மற்றும் வியாபார துறைகளில் பெரும் ஆபத்தை ஏற்படுத்துமென" எச்சரித்துமுள்ளது.

ஆனால் வேறு நாடுகளின் உளவுத் தேவைகளுக்காக, அரேபிய கடற்பிராந்தியம் பாவிக்கப்படுவது அனுமதிக்கப்படாதென ஈரான் எச்சரித்துள்ளது.

ஈரானின் கப்பலொன்று,கடந்த ஏப்ரல் மாதத்தில், கிரேக்கத்தால் கைப்பற்றப்பட்டது. ரஷ்யாவுக்கு எண்ணெய் ஏற்றிச் சென்ற கப்பலே இவ்வாறு கைப்பற்றப்பட்டதாக கிரேக்கம் கூறியது.

இதற்கு பழிவாங்கவே, ஈரான் இச்செயலில் இறங்கியுள்ளது.இவ்விவகாரங்கள், சர்வதேச அரசியலில், பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



கல்முனை NET
kalmunainet.com உண்மையின் முகம்
வெளியில் செல்லும் போது முகக் கவசம் அணிந்து செல்வோம்


Published by Kalmunainet Media Network (Pvt) Ltd. at Boundary Road, Kalmunai 01. on Monday, 30. 05. 2022